வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வீர மலர்

Email : news@eelanadu.lk மலர் : 01 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 337 பக்கங்கள் : 20






08
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான ஆர்வம் அதிகரித் திருக்கின்றதா?



09
13ஐ காலவதியாக்குமா புதிய அரசமைப்பு?



10
அவுஸ்திரேலியாவை பதினெட்டு நாட்களாக உறையவைத்த மர்மம்



13
ஒரே நாடு ஒரே சட்டத்தில் இலங்கையின் எதிர்காலம்!

# புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்துவேன்!

## தன்னை நம்புங்கள் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, நவ. 07

“அன்று என்மீது வைத்த நம்பிக்கையுடன் புரட்சிகரமான மாற்றத்துக்காக அனைவரும் மீண்டும் முன்வர வேண்டும். ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டபடி, புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயமாக நான் ஏற்படுத்துவேன்.”

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

19



# ரூ. 177 ஆல் சீமெந்தின் விலை உயர்வு

*கொழும்பு, நவ. 07*

*சீமெந்தின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, ஒரு சீமெந்து பொதியின் விலையை 177 ரூபா யினால் அதிகரிப்பதற்கு சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள் ளன.*

*அதன்படி, ஒரு சீமெந்து பொதியின் புதிய விலை 1,275 ரூபாய்*

19

# நண்பர்களுடன் நீந்த சென்ற மாணவன் நீரில் மூழ்கி பலி!

## சுழிபுரத்தில் நேற்று துயரம்



*மானிப்பாய், நவ. 07*

*நண்பர்களுடன் கிணற்றில் நீந்தச் சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.*

*இந்த சம்பவம் நேற்று முற் பகல் 11 மணியளவில் சுழிபுரம் - திக்கரை பகுதியில் இடம்பெற்றுள்ளது.*

*இதில், மூளாயை சேர்ந்த*

19

# தமிழ் கட்சிகளிடையேயான ஒற்றுமை முயற்சியை தமிழ் அரசு கட்சி குழப்பாது



## சம்பந்தன் உறுதி

*கொழும்பு, நவ. 07*

*“அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய் யும் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை முயற்சியை இலங்கை தமிழ் அரசு கட்சி ஒருபோதும் குழப்பாது” என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன்*

19

# மேலும் 20 பேர் பலி



கொழும்பு. நவ. 07

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணித்தோர் எண்ணிக்கை அதிகரித் துள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம்

19

# மனோ, ஹக்கீமை இணைத்ததன் மூலமாக காத்திரமான செய்தியை சொல்ல முடிந்தது

## சுரேஷ் பிறேமச்சந்திரன்

*யாழ்ப்பாணம். நவ. 07*

*“13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசிய பரப்பில் உள்ள தமிழ் முற் போக்கு கூட்டணி மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அழைத்தமை மூலம் அரசாங் கத்திற்கு ஒரு காத்திரமான செய்தியை சொல்ல முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது“ என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந் திரன் தெரிவித்துள்ளார்.*

*டான் தமிழ் ஒளி யில் ஒளிபரப்பான நெற்றிக்*

19

# போரில் இறந்தவர்களை நினைவுகூரும் வழமையான நாளை மாற்ற வேண்டாம்

## மறவன்புலவு சச்சிதானந்தன்

*யாழ்ப்பாணம், நவ. 07*

*‘இறந்தோரை நினைவுகூரும் சடங்குகளைச் சைவர்கள் போர் காலங்களிலேயே தீர்மானித் துள்ளனர். போர் முடிந்த பின் பும் இறந்தோரை நினைவு கூர்ந்து சடங்குகள் இயற்றி வரும் சைவர்களைத் திசை திருப்ப வேண் டாம்” என சிவசேனை*

19




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**




# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 11 - 1959



இறப்பு 05 - 11 - 2021

## திருமதி வத்சலா பிரபாகரன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட வத்சலா பிரபாகரன் நேற்றுமுன்தினம் (05-11-2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ராமநாதபிள்ளை - சிவசோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி கோபாலசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபாகரனின் அன்பு மனைவியும், சியாம், சிவந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ராதாமோகன் மற்றும் வசந்தகுமாரி (ஐக்கிய அமெரிக்கா), இமாசலகுமாரி (இலங்கை), மோகனகுமாரி (அவுஸ்திரேலியா), ராஜராம்மோகன் (இலங்கை), விஜயகுமாரி (இலங்கை), உதயகுமாரி (இலங்கை), இரவிசந்திரமோகன்( இலங்கை ), ராஜ்மோகன் (அவுஸ்திரேலியா), சிவகுமாரி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற வசந்தி ராதாமோகன், காலஞ்சென்ற ராஜநாதன், வில்வமங்கள் (இலங்கை), பிரபாகரன் (அவுஸ்திரேலியா), நயேமி (இலங்கை), தவசிலிங்கம் (இலங்கை), காலஞ்சென்ற ஶ்ரீதரன், இரவிச்சந்திரிகா( இலங்கை ), மேனகா (அவுஸ்திரேலியா), வசந்தகுமாரி இராஜேந்திரா (பிரித்தானியா), தயாவதனி குணரத்தினம்( அவுஸ்திரேலியா ), சிவலோசனி மனோகரன் (பிரித்தானியா), ஶ்ரீதரன் கோபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 07 Nov 2021 6:00 PM - 9:00 PM
Monday, 08 Nov 2021 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Monday, 08 Nov 2021 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Monday, 08 Nov 2021 11:00 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ஶ்ரீதரன் கோபாலசிங்கம் (மைத்துனர்)**
**Mobile : +16479687363**

தகவல்:
**குடும்பத்தினர்**

# ஓ. எல்., ஏ. எல். வகுப்புக்கள் நாளை ஆரம்பம்!

*கொழும்பு, நவ. 07*

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளின் சாதாரண தர மற்றும் உயர்தரங்களுக்கான கற்பித்தல் செயல்பாடுகள் நாளை முதல் கட்டாயம் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

10, 11, 12 மற்றும் 13 ஆம் தரங்களுக்கான கற்றல் செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு கோவிட்-19 தடுப்பு செயலணி பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களை 50 சதவீத மாணவர்களுடன் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பயணப்பையில் சடலம் கணவன் – மனைவி கைது

*கொழும்பு. நவ. 07*

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 42 வயதான பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மட்டக்குளியைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

42 வயதான அப்பெண், சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் பயணப் பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கணவன், மனைவி இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சடலத்தை கொண்டு சென்றதாகச் சந்தே கிக்கப்படும் லொறியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## 62 வீத மாணவருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது

*கொழும்பு, நவ. 07*

16 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் இதுவரை சுமார் 62 வீதமானோர், கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கருத்தாடல்

*யாழ்ப்பாணம்,நவ.7*

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சமூக முன்னேற்றத்துக்கான செயல்திட்டம் ஊடாக ‘பல்சமய கருத்தாடல்’ எனும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரை யாழ். பொதுசன நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சமூக செயல்பாட்டு மையம் ஊடாக Helvetas நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பல்சமயத் தலைவர்கள் சமூக மட்டத் தலைவர்கள் இளைஞர், யுவதிகள் என சமூக அக்கறையுள்ள யாவரும் கலந்து கொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்றும் மேற்படி சங்கத்தின் வளவாளர்களால் கடந்த கால ஆக்கபூர்வ செயல் திட்டங்கள் குறித்து விளக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் 07 கார்த்திகை 2021

**“மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை”**

**- கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)**

## கல்வி TV CHANNEL-1
### 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி TV CHANNEL - 2
### 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
07.11.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## இராஜதந்திரத்திற்கான புதிய வரைவிலக்கணம்?

நாங்கள் ஒரு இராஜதந்திர போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றோம் - கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இப்படி அடிக்கடி கூறுவதுண்டு. இதை கேட்டு புளகாங்கிதம் அடைந்தவர்களும் உண்டு. இதில் படித்தவர்கள் என்பவர்களும் அடக்கம். கூட்டமைப்பின் சார்பில் விரைவில் ஒரு குழுவினர் அமெரிக்காவிற்கு பயணமாக உள்ளனர் என செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ஆனால் இந்த ஏற்பாடுகள் தொடர்பில் வழமைபோல் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு எதுவுமே தெரியாது. ஏற்கனவே பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டம் இடம்பெற்றிருந்தது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில், இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பதுதான் அந்தக் கூட்டத்தின் இலக்கு. குறித்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சி பங்கு கொள்ளவில்லை. தாங்கள் ஏற்கனவே, புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஒரு பரிந்துரையை முன்வைத்திருக்கும் நிலையில், 13 வது திருத்தச்சட்டத்தை ஒரு கோரிக்கையாக முன்வைப்பது சிக்கலானதென்று தமிழரசு கட்சியினர் கூறினர் எனவும், இதன் காரணமாகவே குறித்த சந்திப்பில் பங்குகொள்ளவில்லை என்றும் அவர்கள் பக்கத்தில் கூறப்படுகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்திலும் சம்பந்தன் தரப்பு, புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியது. காலம் வீணாகியதை தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை. இப்போது மீண்டும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்படுகின்றது. இப்போதும் விடயங்கள் நடைபெறுவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. ஏனெனில் ராஜபக்ஷக்கள் இருப்பதையும் எடுப்பது பற்றி சிந்திப்பார்களே தவிர, புதிதாக தமிழ்மக்களுக்கு எதனையும் வழங்குவதற்கான வாய்ப்பில்லை. ஆனாலும் சம்பந்தன் அரசியல் யாப்பு தொடர்பில் பேசுகின்றார். இவ்வாறு, நம்பி ஏமாந்து - பின்னர் ஏமாந்து - பின்னரும் ஏமாந்துபோவதுதான் இராஜதந்திரத்திற்கான (சம்பந்தன்-சுமந்திரனின்) புதியவரைவிலக்கணமா?

மிதவாதிகள் கையாண்ட தமிழ் அரசியலென்பது, அடிப்படையில் சட்டத்தரணிகள் கையாண்ட அரசியல்தான். இந்த அரசியல் மோசமான தோல்வியையே இதுவரையில் பதிவுசெய்திருக்கின்றது. இந்த வரிசையில் இறுதியாக தோல்வியடைந்தவர்தான் சுமந்திரன். இதன் பின்னரும் சட்டத்தரணிகள் மட்டும்தான் இராஜதந்திரிகளை சந்திப்போம் என்று கூறுவது எந்தவகையான இராஜதந்திரம்? இன்று தமிழ் மக்கள் மத்தியில் எஞ்சியிருக்கும் மாகாண சபை முறைமை கூட, இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவாக கிடைக்கப்பெற்ற ஒன்று. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மறுத்த நிலையில்தான், அந்தப் பொறுப்பை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தங்கள் தோள் மீது சுமந்துகொண்டது. மாகாணசபையில் பல குறைபாடுகள் இருந்ததை அனைவருமே அறிந்திருந்தனர் எனினும், பிராந்திய சக்தியான இந்தியாவை தமிழர் பக்கமாக வைத்துக் கொள்ளவேண்டுமாயின் அதனை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழியில்லை என்னும் நிலைமையே அன்றிருந்தது. இன்றும் அப்படியானதொரு நிலைமைதான் இருக்கின்றது.

இலங்கைத் தீவின் மீது இந்தியா கொடுத்த அழுத்தங்களை விடவும் வேறு எந்தவொரு நாடும் அழுத்தங்களை கொடுத்துவிட முடியாது. ஏனெனில் இந்தியா அதன் படைகளை தரையிறக்கியது. வடக்கு, கிழக்கு முழுவதும் இந்தியப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அப்போது அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க திருகோணமலைக்கு வந்தபோது, அவரை ஓர் இந்திய கோப்ரல் வழிமறித்த சம்பவம் தொடர்பில், (ரணில் காலத்து பாதுகாப்பு செயலாளர்) ஒஸ்ரின் பெர்னாண்டோ தனது நூலில் பதிவு செய்திருக்கின்றார். தான் அமைச்சர் என்று கூறியதன் பின்னரும்கூட, அந்த கோப்ரல் அவருக்கு அனுமதி வழங்கவில்லை. அந்தளவிற்கு அன்று அனைத்தும் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இதன் காரணமாகத்தான் எப்படியாவது இந்தியப் படைகளை வெளியேற்றியே ஆகவேண்டுமென்னும் முடிவை பிரேமதாச எடுத்திருந்தார். இந்தளவு தலையீட்டின் பின்னரும் கூட, மாகாண சபை முறைமையைத்தான் ஏற்படுத்த முடிந்தது. இப்படியொரு அனுபவம் இருக்கின்றபோது இதனையும் விடவா ஏனைய நாடுகள் அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்? அப்படியொரு அழுத்தத்தை கோரியா சுமந்திரன் குழுவினர் வாஷிங்ரன் பறக்கின்றனர்? ஒரு உச்ச அழுத்தமென்றால் அமெரிக்க படைகள் - ஈழத்தமிழ் மக்களின் பெயரால், இலங்கையில் தரையிறங்க வேண்டும். ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டது போன்று வடக்கு, கிழக்கில் நிலைகொள்ள வேண்டும். அதுதான் உச்சளவிலான அழுத்தமாக இருக்கமுடியும்! ஏனெனில் ஏனைய அழுத்தங்களால் ஆகக் கூடியது ஓர் ஆட்சிமாற்றம் மட்டும்தான் வரமுடியும்.

எனவே, இந்திய பிரதிநிதிகளை சந்திப்பது - அமெரிக்க பிரதிநிதிகளை சந்திப்பதென்பது இதற்கு முன்னரும் நடந்திருக்கின்றது. இதில் பெரிய அதிசயங்கள் எதுவுமில்லை. ஆனால் இதுவரை மேற்கொண்ட சந்திப்புக்களை சம்பந்தனால் ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடிந்திருக்கின்றதா? முடியவில்லை - ஏன் - ஏனெனில் ஆகக் குறைந்தது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குக் கூட சம்பந்தன் நேர்மையாக செயற்படவில்லை. இராஜதந்திர அரசியல் என்பது ஒளித்துபிடித்து விளையாடும் விளையாட்டல்ல. கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் எடுத்த முயற்சி தொடர்பில் மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் விளக்கமளிக்கின்றனர். சம்பந்தனும், செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் ஒரு மேசையில் அமர்ந்து பேசமுடியவில்லையா! தனக்கு அருகிலிருப்பவர்களையே கையாள முடியாத சம்பந்தன், அமெரிக்காவை கையாளப் போகின்றார் என்பதை என்னவென்பது? உண்மையில் இது தமிழ் மக்களை பீடித்திருக்கின்ற தரித்திர அரசியல் வங்குரோத்து நிலைமை.

# அரசாங்கத்தின் திட்டம் சரியானதா? போராட்டங்கள் நியாயமானதா?

**படுவான் பாலகன்**

*இயற்கையோடு இணைந்து, இயற்கையில் கிடைத்தவற்றை உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்த மனிதர். செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட அசேதன பசளைகளையும், நஞ்சு நாசினிகளையும் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். விரைவான வளர்ச்சி, குறைவான காலப்பகுதி என்ற எண்ணத்தை மனதிலே கொண்டு செயற்பட்டனர். தமது ஆரோக்கியத்தின் வயதெல்லையையும் இன்று குறைத்துக் கொண்டிருக்கின்றனர். 80 வயது தொடக்கம் 90 வயதில் மரணித்த காலம் கடந்து 50 வயதினை கடப்பதே சந்தேகமாவிட்டது.*

*இவ்வாறானதொரு காலச்சூழலில், இலங்கை நாட்டினை ஆட்சி செய்து கொண்டிருக்கும் தற்போதைய அரசாங்கம், இயற்கை உரத்தினையே முன்னுரிமைப்படுத்தி வருகின்றது. இதற்கெதிராக தீவெங்கும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. இந்நிலையில் அரசாங்கத்தின் திட்டம் சரியானதா? விவசாயிகளின் போராட்டம் நியாயமானதா? என்கின்ற கேள்வியும் பலரிடத்தில் எழுந்திருக்கின்றன.*

*இயற்கையை நேசிக்கின்ற, இயற்கையோடு வாழ நினைகின்றவர்கள் இயற்கை விவசாயத்தினையும் நேசிப்பர் என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை.*

*அசேதன உரம் இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்பு, இயற்கை முறையிலான விவசாயத்தினையே விவசாயிகள் இலங்கைத் தீவிலே மேற்கொண்டனர். இதன் மூலமாக நஞ்சற்ற உணவினை மக்கள் உட்கொண்டனர். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி உள்ள, ஆரோக்கியமான சமூகம் உருவாகியது. துரதிஸ்டம், அசேதன உரத்தினை இறக்குமதி செய்ததன் விளைவாக பயிர்கள் குறுகிய காலத்தில் விரைவான வளர்ச்சியைப் பெற்றதுடன், பயிர்களும் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகின. இதனால் இதனை கட்டுப்படுத்த கிருமிநாசினிகளை விசுறும் செயற்பாட்டை முன்னெடுத்தனர். அறுவடைக்கு ஒருசில நாட்களுக்கு முன்பும் இவ்வாறான நஞ்சு நாசினிகளை விசுறும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனால் நஞ்சுகலந்த உணவுகளை மக்கள் உண்ண வேண்டிய துர்ப்பாக்கியத்திற்கு ஆளாகியுள்ளனர்.*

*காட்டுப் பசளைகளையும், சேதன பசளைகளையும் பயன்படுத்தாமல் விட்டதினாலும், மண்புழு போன்ற நன்மை தரு விவசாய புழுக்களை அழித்தமையினாலும், இன்று விவசாய நிலங்கள் பசளைகள் அற்ற, செயற்கை உரங்களுக்கு பழக்கமடைந்தவையாக மாறியிருக்கின்றன. இலங்கை நாட்டிற்கே உரிய நெல்லினங்கள் இல்லாமல் போயிருக்கின்றன.*

*குறிப்பாக நாட்டுக் கோழிகள் மிகமிக குறைவடைந்து ப்றைலர் கோழிகள் அதிகம் சந்தைக்கு வந்த நிலைபோல நாட்டினங்கள் மிகமிக குறைந்து, குறைந்த காலப்பகுதிகளைக் கொண்ட நெல்லினங்கள் புழக்கத்தில் உள்ளன. இதனால் புதிய இனங்கள் நோய்த்தாக்கத்திற்கு அதிகம் உள்ளாவதுடன், வரட்சிக்கு ஈடுகொடுக்காத நிலைமையும் உள்ளது. ஆனால் நாட்டினங்கள் எதற்கும் தாக்குபிடிக்கும் சக்தியும், மருத்துவக் குணங்கள் நிறைந்தவையாகும்.*


*விவசாய நிலங்கள் அசேதன உரத்திற்கு பழக்கமடைந்து இருப்பதினாலும், நாட்டினங்கள் இல்லாமல் போயிருப்பதினாலும் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் சேதனப்பசளைகளை பயன்படுத்தி ஈடுபடுவதற்கு அச்சப்படுகின்றனர். நோய் தாக்கத்தினால் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுவிடுமோ? என்றும் சிந்திக்கின்றனர். விவசாயத்தினையே வாழ்வாதாரமாக கொண்டு, அதற்காக கடன்பெற்று விவசாயத்தில் ஈடுபடுவதனால், உரிய விளைச்சல் இல்லாத போது தமக்கேற்படும் சுமையை எவ்வாறு தாங்கிக்கொள்வதென தெரியாது புலம்புகின்றனர்.*

*இயற்கை விவசாயம் எதிர்காலத்திற்கு தேவை என்பதனை உணர்ந்து கொண்டாலும், நீண்ட காலமாக அசேதன பசளைப் பயன்பாட்டில் மேற்கொண்ட "விவசாயத்தை ஒரே நாளில் எவ்வாறு சேதனப்பயன்பாட்டில் மேற்கொள்வது?" என்ற விவசாயிகளின் கருத்தை வெறுமனே விட்டுச் சென்றுவிட முடியாது. ஏனெனில் பொருளாதார ரீதியான பாதிப்பினை எதிர்கொள்கின்றவர்கள் அவர்களே. இயற்கை விவசாயத்தினை ஏற்படுத்துவதற்கு முன்பு, விவசாய நிலங்களை சேதனைப்பசளைகள் கொண்ட நிலமாக மாற்றுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருக்கலாம்.*

*முழுமையாக சேதன பசளை பயன்பாட்டை அமுல்படுத்தாமல், குறிப்பிட்ட வீதங்களாக ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துச் சென்றிருக்கலாம். தற்போதைய சேதனைப் பசளை பயன்பாட்டில் மேற்கொள்ளும் விவசாய செய்கையில் நஸ்டம் ஏற்படுகின்ற போது, விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான திட்டத்தினை வகுக்க வேண்டும். அதேபோன்று எமது நாட்டிற்கே உரித்தான நெல்லினங்களை மீண்டும் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலமாக நாட்டில் எதிர்காலத்தில் முழுமையான இயற்கை விவசாயத்தினை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், சிறந்த ஆரோக்கிய சமூகத்தினையும் உருவாக்க முடியும்.*

*விவசாயிகள் அசேதனப்பசளை இறக்குமதி செய்யவில்லை. இறக்குமதி செய்தவர்கள் ஆட்சியில் இருந்தவர்களே. ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்களும் குறுகிய நோக்கத்துடன் திட்டங்களை வகுக்காது நீண்ட காலத்திட்டங்களையும், இயற்கையை பாதிக்காத வகையிலான திட்டங்களையும் அமுல்படுத்த வேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன் 07.11.2021 – 13.11.2021

நவம்பர்.07 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி 21
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : திரிதியை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்களின் முயற்சிக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு நிலவும். மன நிம்மதி கூடும். சிறு அலைச்சல்கள் இருந்தாலும் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கவலைகள் காணாமல் போகும். மகிழ்ச்சியூட்டும் தகவல்கள் வரும். வாகனம், வீடு, மனை வாங்கும் போது கவனம் தேவை. பணியில் இருப்பவர்களுக்கு முன்னேற்றமான சூழல் இருக்கும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றமான சூழல் ஏற்படும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உழைப்புக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கப் பெறுவீர்கள். போட்டிகளில் ஈடுபட்டு சிறப்பான வெற்றியைப் பெறுவீர்கள். பணியைக் கண்ணும் கருத்துமாக செய்வது நல்லது. மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தி நல்ல மதிப்பெண் பெறுவீர்கள். பெண்கள் சற்று கவனமாக இருப்பது அவசியம். வியாபாரிகளுக்கு வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களிடம் செயல் திறன் கூடும். அரசு துறை செயல்பாடுகளில் கவனம் தேவை.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வாகனத்தை கையாள்வதிலும், பயணங்கள் செய்யும் போது கூடுதல் கவனத்துடன் இருப்பீர்கள் என்பதால் கவலை இல்லை. குடும்பத்திலும், மனதிலும் இருந்த குழப்பம் நீங்கி நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் உண்டாகும். சமீபத்தில் ஏற்பட்டிருந்த டென்ஷனிலிருந்து விடுபடுவீர்கள். பெரிய முதலீடுகளில் இறங்கும்போது கவனம் தேவை. முயற்சிக்குரிய நன்மை பெறப் போகும் வாரம் இது. பிள்ளைகளுடனான உறவு பலப்படும். ஆடை, ஆபரணம் சேரும். அலுவலகத்தில் தேவையற்ற கருத்து மோதலைத் தவிர்த்து நிம்மதியடைவீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பொருளாதாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். முன்னேற்றமான வாய்ப்புகள் உண்டாகும். உங்களின் அறிவாற்றல் அதிகரிக்கும். ஆரோக்கியம் தொடர்பான நல்ல தகவல் உண்டு. காத்திருந்தோருக்கு எதிர்பார்த்த வரன் அமையும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மற்றவர்களை நல்வழிப்படுத்த முயற்சி செய்வீர்கள். அலுவலகத்தில் வாக்கு வாதம் ஏற்படலாம். பிள்ளைகளுடன் நல்லுறவு ஏற்படும். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மேற்கல்வி தொடர்பான வெளிநாடு, வெளியூர் பயணம் செய்வதற்கான உறுதிப்பாடு கிடைக்கும். முயற்சிக்கான நன்மை கிடைக்கும். பேச்சிலும், செயலிலும் திறமை அதிகரிக்கும், வியாபாரிகளுக்கும், தொழில் செய்வோருக்கும் கூடுதல் லாபம் கிடைக்கும். பெற்றோரின் அன்பு கிடைக்கும்.விளையாட்டுத்துறையில் உள்ளோர் வெற்றி பெறுவர். லாபமும், செல்வாக்கும் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய ஆவணங்களைக் கையாள்வதில் கவனம் தேவை.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சிலருக்கு திடீர் இடமாற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சியளிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுடன் இணக்கம் கூடும். புதிய முதலீடுகள் செய்ய நினைப்பவர்களுக்கு சாத்தியமான காலம். தடைப்பட்டிருந்த உங்கள் எண்ணங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். செயலில் தடை குறுக்கிட்டாலும் முடிவு நன்மையே. மனக் குழப்பம் நீங்கி நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் உண்டாகும். பேச்சில் நிதானம் தேவை.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பொருளாதார ரீதியாக முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் உங்களுடன் விட்டுக் கொடுத்து செல்வர். குடும்பத்தினருக்கு எதிர்பாராத நல்ல செய்தி வரும். திட்டங்கள் நிறைவேற நல்ல வாய்ப்பு அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். காதல், திருமண உறவில் முக்கிய முடிவை எடுப்பதை தள்ளி வைப்பது நல்லது. உங்கள் உணர்வுகள் மதிக்கப்படும். உறவை மேம்படுத்துவீர்கள். குடும்பத்தில் வயதான ஒருவரைப் பற்றி கவலைப்படக்கூடும். நிதி விஷயங்களில் கவனம் தேவை.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

அலுவலகத்தில் கிடைக்கும் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைக்கு திடீர் செலவு ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். மனைவிக்கு, கணவருக்கு சந்தோஷ செய்தி வரும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும். தொலைதூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்க வாய்ப்புண்டு. வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வீர்கள். உங்கள் சிரமம் அறிந்து நல்லவர்கள் உதவுவர். தொழிலில் பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்னை தீரும். குடும்ப விழா சிறப்பாக நடைபெறும். வெற்றி இலக்கில் இன்னொரு படியை எட்டுவீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பேசுவதற்கு முன் இரு முறை யோசித்துப் பேசினால் பிரச்னைகளிலிருந்து தப்பலாம். சரும பிரச்னைகள் சரியாகும். மனதில் நிம்மதி நிலைக்கும். அக்கம் பக்கத்தினருடன் ஒற்றுமை ஏற்படும். பயனற்ற விஷயங்களுக்குச் செலவு செய்ய நேரிடும், அதிகாரிகள் உங்கள் மீது கருணை கொள்வர். பேச்சினால் பெரிய நன்மை ஏற்படும். விவாதத்தைத் தவிர்க்கவும். புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள நேரிடும். உறவினர்களிடம் பொறுமை காக்கவும். வியாபாரத்தில் சந்தோஷம் தரக்கூடிய சூழல் உருவாகும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பேச்சு, செயலில் கவனம் தேவை, தேவையற்ற விவாதங்களில் ஈடுபட வேண்டாம். பயம் நீங்கும். அதிகம் உழைத்து அதற்கேற்ற லாபம் பெறுவீர்கள். நம்பிக்கையோடும் விடாமுயற்சியோடும் செயல்படுகிறீர்கள் என்பதால் பெரிய வெற்றி காத்திருக்கிறது. எதிர்பாலினத்தினரால் நன்மை உண்டாகும். பாராட்டும் புகழும் கிடைக்கும். மகளுக்கு, மகனுக்கு நற்செய்தி உண்டு. தவறான எண்ணத்தை கைவிடுங்கள். பொறுப்புடன் செய்ய வேண்டிய செயல்பாடுகளில் கவனம் தேவை. தடை, தாமதம் குறுக்கிட்டாலும் முடிவு சாதகமாக முடியும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இனிமையான அனுபவம் பெறும் வாரம் இது. உறவினர்களிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படாமல் இருப்பது அவசியம். பணியிடத்தில் அலட்சியம் வேண்டாம். நண்பர்களால் நன்மை உண்டாகும். தந்தைக்கு உதவி செய்து அவரின் ஆசியைப் பெறுவீர்கள். குழந்தை பாக்கியத்துக்கு ஏங்கியவர்களுக்குச் சந்தோஷத் தகவல் உண்டு. நிறைய செலவுகள் செய்தாலும் அதன் மூலம் மகிழ்ச்சியும் நன்மையும் வந்து சேரும். ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. உழைப்பின் மூலமாகவே அதிர்ஷ்டம்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

திருமணத்திற்குக் காத்திருந்தவர்களுக்கு நல்ல செய்தி வரும். தாயார் பற்றிய கவலை நீங்கும். வாகனம் வாங்கும் முயற்சியில் வெற்றி உண்டு. மாணவர்களின் கவலைகள் தீரும். ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கம் பற்றிய முயற்சி அனுகூலமாக முடியும். முக்கிய பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும். சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். எதிர்பாராத உதவி ஒன்று கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட தொல்லை விலகும்.

# மகளின் திருமணத்தில் ஒரு தந்தையின் உரை

## பகிர்வு - 2

**கணபதி சர்வானந்தா**

எழுபதுக்கு முன்பாக எமது சமூகத்தில் எல்லாமே நிச்சயிக்கப்பட்ட திருமணமாகத் தான் இருந்தது. காதல் திருமணங்கள் குறைவு என்று சொல்வதைக் காட்டிலும் இல்லை என்றே சொல்லலாம். பல பொருட் செலவில் நடத்தப்படும் அத் திருமணங்கள் தடல் புடலாக நடைபெறும். திருமணம் முடிந்து பெண்ணானவள் மாப்பிள்ளை வீட்டுக்குப் போகும் தருணம் அந்த மணவீடு மரணவீடுபோலாகிவிடும். அவ் வீடு சோகத்தின் உறைவிடமாகி விடும். குறிப்பாகப் பெண்பிள்ளை தன் தாயைக் கட்டி அழுவதைப் பார்க்கலாம். குடும்ப உறுப்பினர்கள் மூலைக்கு மூலை நின்று விசும்பும் ஒலி கேட்கும். பிரிவின் துயரைப் பொறுக்காத அக் குடும்பத்தவர்கள் அனுபவிக்கும் சோகத்தின் எதிரொலியே அது.

ஒரு தந்தை தனது மகளின் திருமண விழாவில் ஆற்றிய உரை எனத் தலைப்பிட்ட ஒரு பதிவை முகநூல் பகிர்வொன்றில் படிக்க நேர்ந்தபோது அது எனக்கு மேற்குறிப்பிட்ட எம்மவர் பற்றிய பழையனவற்றை ஞாபகப்படுத்தியது.

மிகவும் உருக்கமான, யதார்த்தமான, இயல்பான அந்தப் பதிவு இதோ உங்களுக்காக...!

“ஒரு பெண்ணைப் பெற்றெடுத்த பொறுப்புள்ள தந்தை என்ற முகவரியோடு எனது கருத்தை முன்வைக்கிறேன். எனது மனதின் மகிழ்ச்சியான இந்தத் தருணத்தில் பங்கு கொண்ட உங்கள் அனைவருக்கும் நன்றி.! இந்தநாள் வாழ்வில் மறக்க முடியாத நாளாக மாறி விட்டதற்குக் காரணம் எங்கள் மகளின் திருமணம். எங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் நாம் இனி, இளைப்பாற விரும்புகிறோம். பணியில் இருந்து ஓய்வு பெற்ற போது கூட நான் இத்தனை சந்தோஷம் பட்டதில்லை. எமக்குக் கிடைத்திருக்கும் இவ் இளைப்பாறுதலை நாம் அனுபவிக்கத் தயாராகிவிட்டோம். எமது இந்த மகிழ்ச்சி தொடர வேண்டுமாயின், நிரந்தரமாக இருக்கவேண்டுமாயின் - நீங்கள் அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

நான் எதிர்பார்ப்பதைவிட நீங்கள் அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். அவள் என் வீட்டில் துள்ளித் திரிந்ததை விட உங்கள் வீட்டில் மகிழ்ச்சித் துள்ளலோடு இருப்பாள் என எதிர்பார்க்கிறேன். இருந்தாலும், எல்லாச் சராசரித் தந்தையைப் போலவே நான் இதைத் திரும்ப திரும்பச் சொல்கிறேன்.

தயவு செய்து அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவள் எப்போதுமே எனக்கு பாரமாக இருந்ததில்லை. இனியும் அவளை ஒருபோதும் பாரமாகக் கருத மாட்டேன். ஏனெனில், என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும், என் இதழ்களில் புன்னகை பூப்பதற்கும் காரணம் அவளே. இருந்தும் அவளை நான் திருமணம் செய்து கொடுக்கிறேன். ஏனென்றால் அது ஓர் இயற்கை நியதியாக இருக்கிறது.

கலாசாரத்துக்கு கட்டுப்பட்டு மட்டுமே அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். என் வீட்டின் மகிழ்ச்சிப் பேழை உங்கள் வீட்டில் ஒளி வீச வருகிறது. எனது உலகத்தை உங்களுக்கு தாரை வார்த்துத் தருகிறேன். அந்த உலகம் என்றென்றைக்கும் அழகாக இருப்பதை நீங்களே உறுதி செய்ய வேண்டும்.

எனது இளவரசியை உங்களிடம் அனுப்புகிறேன். அவள் உங்கள் வீட்டின் இராணியாகத் திகழ வழிவகை செய்யுங்கள். எனது குருதியும், வியர்வையும் அவளை ஆளாக்கியிருக்கிறது. இப்போது அவள் மாசறு பொன்னாக இருக்கிறாள்.

அவள் உங்கள் வீட்டுக்கு கொண்டு வரும் அன்பு, அக்கறை, அரவணைப்பு, அழகு, இதம் என எல்லாப் பண்புகளுக்கும் பரிசாக அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுங்கள். ஆம், அவளை தயவுசெய்து மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

எப்போதாவது அவள் சிறு தவறு செய்துவிட்டாள் என நினைத்தால் அவளைத் திருத்துங்கள், உங்கள் பிள்ளையைப்போல.. தாராளமாகத் திட்டுங்கள், ஆனால் அதே வேளையில், அவள் மேல் செலுத்தும் அன்பைக் குறைத்து விடாதீர்கள்.

அவள் மிகவும் நளினமானவள். அவள் எப்போதாவது துவண்டு போய் இருந்தால் அவளுடன் கூடவே இருங்கள். உங்களது சிறு கவனம் அவளுக்கு போதும், ஆறுதல் தர. அவள் உடல்நலன் பாதிக்கப்பட்டால் அவள் மீது அக்கறை காட்டுங்கள். அதுவே அவளுக்கு அருமருந்தாகும் என்பது எனது நம்பிக்கை. ஏனெனில் அப்படித்தான் நான் அவளை வளர்த்தெடுத்திருக்கிறேன்.

அவளது பொறுப்புக்களில் எப்போதாவது விலகிவிட்டால், அதைச் சுட்டிக்காட்டுங்கள். அவளைப் புரிந்து கொள்ளுங்கள். என் மகளின் மகிழ்ச்சி மட்டுமே என் வாழ்நாள் லட்சியம். எனவே, தயவு செய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

அன்பிற்குரிய மருமகனே-

இந்த வார்த்தைகளின் அர்த்தம் இப்பொழுது உங்களுக்குப் புரியாமல் போகலாம். ஆனால், நாளை நீங்கள் ஒரு மகளைப் பெற்றெடுத்த பாக்கியவான் ஆகும்போது எனது வார்த்தைகளின் அர்த்தம் உங்களுக்குப் புரியும்.

அப்பொழுது உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் “என் மகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்“ என்று சொல்லும். எனவே, தயவு செய்து எனது மகளை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள்.”

இந்த உரையை மகளைப் பெற்ற ஒவ்வொரு தந்தைக்கும் அர்ப்பணிக்கிறேன் ....!






# இராஜாங்க அமைச்சர் விதுர யாழ். பல்கலைக்கு விஜயம்

யாழ்ப்பாணம். நவ. 07.

**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு, பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.**

நேற்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலின் போது, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன், அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தொல்லியல் துறையின் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் ஆய்வுகூடத்தையும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பார்வையிட்டார்.

இச் சந்திப்பின், போது தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி கே.அருந்தவராஜா, வரலாற்றுத் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி ப.புஷ்பரட்ணம், கலாநிதி கே.சிற்றம்பலம், கலாநிதி ச.சத்தியசீலன், கலாநிதி செ.கிருஷ்ணராஜா உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கே. சிவராம், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், மற்றும் தொல்லியல்துறையினர், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்கு நூல் ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

# அரசியல் தியாகத்துக்கு தயாராகின்றார் ருவான்!

## பதவியை பணயம் வைத்து அறிவிப்பு

கொழும்பு, நவ. 07

“கட்சியை பலப்படுத்தக்கூடிய ஒருவருக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்குவதற்கு நான் தயார். கட்சிக்காக இந்த தியாகத்தை செய்வதற்கு தயாராகவே இருக்கின்றேன்.”

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன அதிரடியாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இதன்போதே ருவான் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஐ.தே.கவிலுள்ள தமிழ் உறுப்பினர் ஒருவர் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

“ஐக்கிய தேசியக் கட்சிக்காக தம்மை அர்ப்பணித்த நவீன், அர்ஜூன ரணதுங்க, ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். ருவானுக்கு சார்பான சிலருக்கே பதவி வழங்கப்படுகின்றது.” - என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கையிலேயே ருவான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை பலப்படுத்துவதே தனது நோக்கம் எனவும், தலைமைத்துவத்தை கைப்பற்றும் எண்ணம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அலி சப்ரியின் சகோதரனையும் பதவி விலகுமாறு அழுத்தம்?

கொழும்பு, நவ. 07

நீதியமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ள நிலையில், அவரது சகோதரர் மொஹமட் யுவேசும் தனது பதவியில் இருந்து விலகுவதற்கான அழுத்தங்கள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதியமைச்சர் அலி சப்ரியின் சகோதரர் மொஹமட் யுவேஸ், பெற்றோல் களஞ்சியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகித்து வருகிறார்.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டதை அடுத்து, நீதியமைச்சர் அலி சப்ரி அதிருப்தியடைந்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக தெரியவருகிறது. இந்த நிலையில், அவரது சகோதரர் மொஹமட் யுவேஸ் பதவி விலக வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகரித்துள்ளனவென தெரியவருகிறது.

# சீனி மட்டும் வாங்குங்கள்!

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு,நவ. 07

ச.தொ.ச விற்பனை நிலையங்களில் நேற்று முதல் சீனி மட்டும் கொள்வனவு செய்ய முடியும் என நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ச.தொ.ச விற்பனை நிலையத்தில் ஐந்து பொருட்கள் வாங்கும் பட்சத்தில் மட்டுமே 3 கிலோ சீனி கொள்வனவு செய்ய முடியும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இதனால் பொதுமக்கள் பெரும் அதிருப்தியடைந்திருந்ததுடன், கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.



இந்த நிலையில், நேற்று முதல் ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் சீனி மட்டும் கொள்வனவு செய்ய முடியும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி கனகபுரம் உட்கட்டமைப்பு வீதி மக்கள் பாவனைக்காக நேற்று திறந்து வைப்பு

கிளிநொச்சி, நவ. 07

கிளிநொச்சி கனகபுரம் உட்கட்டமைப்பு வீதி நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

கிராமிய மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 48.51 மில்லியன் ரூபாயில் அமைக்கப்பட்ட ஒரு கிலோமீற்றர் காப்பெற் வீதியே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீதியானது கரைச்சி பிரதேச சபைக்க சொந்தமானதாகும்.

குறித்த வீதியை நேற்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வை.தவநாதன் திறந்து வைத்தார்.

(அ)

# ஒரு நாள் ஒரு குடும்பத்துக்கு பாதி தேங்காய் போதுமானது

கொழும்பு, நவ. 07

சரியான முறையில் பயன்படுத்தினால் ஒரு நாளைக்கு ஒரு வீட்டுக்கு பாதி தேங்காய் போதுமானதாகும் என தென்னை ஆராய்ச்சி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும தெரிவித்தார்.

உள்நாட்டு தேங்காய் பாவனையில் 30 சதவீதம் வீணடிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வருடாந்த தேங்காய் உற்பத்தில் 70 வீதம் உள்நாட்டு பாவனைக்காக பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தேங்காய் பால் எடுக்கும் போது கையால் பிழிந்தால் 20-30 வீதம் அளவில் தேங்காய் பால் கிடைத்தாலும், அரைப்பான், திரிகைக்கல் ஊடாக அரைத்து எடுக்கும் போது 50 வீதத்திற்கும் அதிமான அளவு தேங்காய் பால் பெறமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். அரச அதிபரை சந்தித்தார் 51ஆவது பிரிவு கட்டளை தளபதி!

யாழ்ப்பாணம், நவ. 07.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கும் யாழ். மாவட்ட 51ஆவது பிரிவின் இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவுக்கும் இடையிலான மரியாதை நிமித்தமான சந்திப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில் பொதுவான பலவிடயங்கள் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் மக்களின் முன்னேற்றம் கருதி பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அச்செயற்பாடுகளுக்காக மாவட்ட அரசாங்க அதிபர் தனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தார்.



மேலும் மக்களின் முன்னேற்றம் கருதி அபிவிருத்திக்காக தங்களால் ஆன முழுமையான ஒத்துழைப்புகளை தொடர்ந்து வழங்க தாம் தயாராக இருப்பதாக 51ஆவது பிரிவின் இராணுவ கட்டளைத் தளபதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அலி சப்ரியின் இராஜினாமாவை ஏற்பதற்கு மறுத்தார் ஜனாதிபதி?

கொழும்பு, நவ. 07

**அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக கூறி, நீதியமைச்சர் அலி சப்ரி கையளித்த இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.**

ஒரு நாடு - ஒரு சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிமக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் நீதியமைச்சர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் கையளித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அலி சப்ரியின் பதவி விலகல் கடிதத்தை ஏற்கவில்லை என அரசாங்கத்தின் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியை சந்தித்த அமைச்சர் அலி சப்ரி, சட்டங்களை உருவாக்க நாட்டில் உரிய நடைமுறைகள் இருக்கும் போது, இப்படியான செயலணிக்குழுவின் மூலம் சட்டத்தை உருவாக்குவது தேவையற்ற பிரச்னைகளை உருவாக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நியமனம் குறித்து தனக்கு தெளிவில்லை எனவும் நீதியமைச்சர், ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பில் தான் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவே ஜனாதிபதி செயலணிக் குழுவை நியமித்ததாகவும் வேறு விடயங்களுக்காக அல்ல எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் சட்டங்களை உருவாக்கும் போது கட்டாயம் நீதியமைச்சரின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி, அலி சப்ரியிடம் தெரியப்படுத்தியுள்ளார். மேலும் அமைச்சர் அலி சப்ரியின் பணிகளை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

அத்துடன் ஞானசார தேரரின் நியமனம் சம்பந்தமாக சிலர் தவறாக புரிந்துக்கொண்டுள்ளதாகவும் அந்த எண்ணத்தை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

# கோழி கூட்டுக்குள் சிக்கியது சிறுத்தை

கொழும்பு, நவ. 07

ஹற்றன், டிக்கோயா - ஹார்ட்லி தோட்டத்தில் கோழிக் கூடொன்றில் சிக்கிய சிறுத்தை மீண்டும் காட்டுக்குள் விடுவிக்கப்பட்டுள்ளது.

கோழிகளை வேட்டையாடுவதற்காக தோட்டத்திற்குள் நுழைந்த சிறுத்தை நேற்று முன்தினம் கோழிக் கூட்டுக்குள் சிக்குண்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து தோட்ட அதிகாரிகள் நல்லதண்ணி வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து, சிறுத்தையை மீண்டும் காட்டிற்குள் விடுவிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து சிறுத்தை காட்டிற்குள் விடுவிக்கப்பட்டுள்ளது.

கோழிகள் மற்றும் நாய்களை வேட்டையாடுவதற்காக சிறுத்தைகள் தமது தோட்டப்பகுதிக்கு இரவு நேரத்தில் வருகை தருவதாக தோட்ட மக்கள் இதன் போது கூறியுள்ளனர்.

# நாட்டில் வீதி விபத்தை குறைக்க 200 கோடி டொலர்கள் தேவை!

## உலக வங்கி கூறுகின்றது

கொழும்பு, நவ. 07

நாட்டில் வீதி விபத்துக்களை பாதியாகக் குறைக்க அடுத்த 10 வருடங்களில் 200 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இல்லையெனில் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மோசமாக பாதிக்கும் என்பதை இது காட்டுகிறது.

உலக வங்கியின் அறிக்கையின் படி, இலங்கையில் வருடாந்தம் சுமார் 38,000 வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அவற்றில் 3,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுவதுடன், 8,000க்கும் மேற்பட்டோர் காயமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

சனத்தொகை அடிப்படையில் தெற்காசியாவிலேயே அதிகளவானோர் வீதி விபத்துக்களால் உயிரிழக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலை வகிப்பதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையானது அபிவிருத்தியடைந்த நாடுகளை காட்டிலும் சுமார் 5 மடங்கு அதிகம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மேற்கு கடற்பரப்பை நோக்கி நகர்கின்றது சீன உரக் கப்பல்

கொழும்பு, நவ. 07

*சீன சேதனப் பசளையை ஏற்றிய ஹிப்போ ஸ்பிரிட் கப்பல், நாட்டின் மேற்கு கடற்பரப்பை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதாக கடற்படையின் இணையத்தளம் உறுதி செய்துள்ளது.*

*குறித்த சேதனப் பசளையில் தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக்கள் காணப்படுவதாக இரு சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தப்பட்டமையால் இலங்கை அரசு, உரத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை, தீங்கு விளைவிக்கும் பற்றீரியா அடங்கிய உரத்தை இலங்கைக்கு அனுப்பிய சீன நிறுவனத்திற்கு பணம் செலுத்துவதை தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளது.*

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, நவ. 07

மழையுடனான வானிலை காரணமாக 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நீடித்துள்ளது.

அதன்படி கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை மற்றும் காலி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று வரை நீடித்துள்ளது.

# சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் 18 சிறுவர்களுக்கு கொரோனா!

கொழும்பு, நவ. 07

பண்டாரவளை பகுதியில் உள்ள சிறுவர் பராமரிப்பு இல்லமொன்றில் 24 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாக பண்டாரவளை பொது சுகாதார பரிசோதகர் ரவி சம்பத் தெரிவித்தார்.

தொற்றுறுதியானவர்களில் 18 சிறுவர்களும், 6 பணியாளர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் தொற்றுறுதி யானவர்களுடன் தொடர்புடையோருக்கு நேற்று கோவிட் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பண்டாரவளை பொது சுகாதார பரிசோதகர் ரவி சம்பத் தெரிவித்தார்.

# 4 நாட்களில் 505 பேர் டெங்கினால் பாதிப்பு

கொழும்பு, நவ. 07

நாட்டில் ஜனவரி முதல் கடந்த 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 22,902 டெங்கு காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளிகள் பதிவாகியிருந்ததாகவும் அவர்களில் 2,979 பேர் ஒக்ரோபர் மாதத்திலும், மேலும் 505 பேர் நவம்பர் மாத முதல் நான்கு நாள்களில் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது.

இது தொடர்பில் அந்தப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு நுளம்புப் பரவுகைக் கண்காணிப்பு நடவடிக்கையின் பிரகாரம், நுளம்புகள் பெருகும் இடங்கள் அதிகரிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலையில், எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமை டெங்கு நோயின் சடுதியான அதிகரிப்பு நிலையாக மாறுவதைத் தவிர்ப்பதற்காக மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்ட 59 அதிக டெங்கு ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நவம்பர் 8ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது, கள சுகாதார பணியாளர்கள், பொலிஸார், முப்படையினர் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் அடங்கிய குழுக்கள் பொது மக்களின் வீடுகளுக்குச் சென்று, வீடுகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள நுளம்புகள் பெருகும் இடங்களைக் கண்டறிந்து, அந்த இடங்களை அகற்றுவது குறித்து வீடுகளில் உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்குவார்கள். அதேநேரம், வீடுகளிலும், சுற்றுப்புறங்களிலும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, நுளம்புகள் உற்பத்தியாகாத சூழலை எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்தும் பொதுமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். கோவிட் 19 தொற்று நோய் இன்னும் நிலவி வருவதால், இந்த பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடும் குழுக்களுக்கு வீட்டில் உள்ளவர்களையும் தங்களையும் கோவிட் பரவுகையிலிருந்து பாதுகாக்கும் அதே வேளை, வீடுகளை எவ்வாறு பாதுகாப்பான முறையில் சோதனை செய்வது என்பது குறித்த புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். நவம்பர் 3ஆம் திகதியன்று, சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள், பொலிஸ், முப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படை ஆகியவற்றின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், இத்திட்டத்தை எவ்வாறு வெற்றியடையச்செய்வது என்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அதனுடன் தொடர்புடைய முடிவுகளும் எடுக்கப்பட்டன.

கோவிட் 19 உலகளாவிய தொற்று நோயிலிருந்து நாம் மெதுவாக மீண்டுவரும் இவ்வேளையில் டெங்கு தொற்று நோயின் பாதகமான விளைவுகளைப் புரிந்துகொள்வது அவசியமாகும். எனவே, டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். திட்டமிடப்பட்டுள்ள விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்திற்கு அனைவரினதும் ஆதரவை சுகாதார அமைச்சு கோருகிறது. வீடு களுக்குச் செல்லும் குழுக்கள் அன்புடன் வரவேற்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படும் என நாம் எதிர்பார்க்கிறோம்-என்றுள்ளது.

# அரசாங்கம் மாறிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா?

## ஆளுங்கட்சி எம்.பி. கேள்வி

கொழும்பு, நவ. 07

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி மோசம் எனில், இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி விட்டு யாருக்கு ஆட்சியை வழங்குவீர்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கேள்வி எழுப்பியுள்ளார்.

நிகழ்வொன்றில் பங்குபற்றிய தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் ஆட்சியை வழங்கிவிட்டால், மக்கள் வரிசையில் நிற்க மாட்டார்களா, நாட்டில் டொலர் நெருக்கடி தீர்ந்துவிடுமா, எரிபொருள் விலை குறைந்துவிடுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும், அரசாங்கமோ அல்லது ஆட்சியாளரோ மாறினாலும் தற்போதை நிலைமையை எவராலும் மாற்ற முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி குறிப்பிட்டார்.

(அ)

# வாகன விபத்துகளில் நால்வர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 07

திருகோணமலை, மொனராகலை, பண்டாரகம மற்றும் பொல்பித்திகம ஆகிய பிரதேசங்களில் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலை-முருகாபுரி பிரதேசத்தில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் 53 வயதான ஒருவர் உயிரிழந்தார்.


மொனராகலை-வெல்லவாய வீதியின் கச்சேரி சந்தியில் பஸ் மோதி பெண் ஒருவர் பலியாகினார்.

பண்டாரகம பகுதியில் முச்சக்கரவண்டி மோதியதில் ஒருவர் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொல்பித்திகம - கலுகல்ல பாலத்தின் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் 34 வயதான ஒருவர் பலியாகினார்.




# தமிழகத்தின் எதிர்க்கட்சி பா. ஜ. க.?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

தமிழகத்தில் ஒரு விசித்திரமான அரசியல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அது வியப்பூட்டுவதாகவும் விநோதமாகவும் இருக்கிறது. மே மாதத் தேர்தலில் ஸ்டாலினிடம் தோற்றுப்போய் எதிர்க்கட்சித் தலைவராக சட்ட சபையில் தனது அண்ணா திமுகவின் அறுபத்தி ஐந்து உறுப்பினர்களுடன் அமைதியாக அமர்ந்திருக்கும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, பேரவைக்கு வெளியில் பிரதான எதிர்கட்சித் தலைவரின் பதவியை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையிடம் பறிகொடுத்திருக்கிறார். தமிழகத்தின் 234 உறுப்பினர் கொண்ட சட்டசபையில் நான்கே உறுப்பினர்களைக் கொண்ட அண்ணாமலையின் கட்சியில் உள்ள காவித் தலைவர்களின் கர்ஜனை எல்லா திசைகளிலும் அதிரவைக்கிறது. ஒரு நேர்மையான ஐ.பி.எஸ் அதிகாரியாக கர்நாடகாவில் பணியாற்றும்போது அவரை ‘சிங்கம்’ என்று கர்நாடக மக்கள் சும்மாவா சொன்னார்கள்!

திமுக அரசாங்கத்துக்கு எதிராக அண்ணாமலை பல பிரச்னைகளை எழுப்பி வருகிறார். அரசின் எல்லா செயல்பாடுகளும் அவரது பூதக்கண்ணாடியின் ஆராய்ச்சிக்குக்கீழ் இழுக்கப்படுகின்றன, எல்லா செயல்பாடுகளின் மீதும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மிக சமீபத்தில் முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழக அரசு கேரள அரசிற்காக விட்டுக்கொடுத்திருப்பதாக அவர் வைக்கும் கோஷம், எட்டு காவிரி மாவட்டங்களில் போராட்டங்களை அறிவிப்பதற்கு பாஜகவிற்கு ஒரு

மக்கள் மத்தியில் அஇஅதிமுகவுக்கு பதிலாக பாஜகவை முக்கிய எதிர்க்கட்சியாக முன்னிறுத்தியிருப்பதில் வெற்றிபெற்றிருக்கும் சிங்கம் அண்ணாமலையை நிச்சயம் பாராட்டவேண்டும். இது தொடர்ந்து நடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அண்ணாமலைக்கு சாதகமான இன்னோர் அம்சமும் இருக்கிறது.

அஇஅதிமுகவின் முந்தைய குற்றங்களை திமுக அரசு கடுமையாகக் கையாள்கிறது. கட்டப்பஞ்சாயத்து, நில அபகரிப்பு, சாராய வியாபாரம் போன்ற அஇஅதிமுகவின் ‘வழக்கமான வாழ்வாதார’ செயல்பாடுகளைத் தொண்டர்களால் நடத்த முடிவதில்லை. அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் கடினமானதாக இருக்கிறது. காவல்துறையின் அழுத்தம் அதிகமாக இருக்கிறது. சிறிய வழக்குகளில்கூட ஜாமீன் கிடைக்காத நிலை. நில ஆவணங்கள் தொடர்பான பிரச்னைகளில் வருவாய் அதிகாரிகள்கூட அவர்களுக்கு உதவுவதில்லை. மருத்துவம், உள்ளாட்சி, கல்வி போன்ற பிற துறைகளில் பெரிய ‘ஒத்துழைப்பை’ எதிர்பார்க்கவே முடியாது. தாய்க்கட்சியான திமுகவுக்கே திரும்பச் சென்றுவிடலாம் என்றுகூட சில அஇஅதிமுகவினர் நினைக்கக்கூடும். ஆனால், பலரும் பாஜகவுக்குத் தாவுவதற்கே விரும்புவார்கள். மத்தியில் சிறப்பாக ஆட்சி செய்யும் பிரதமர் மோடியினாலும், நம்பிக்கையோடு பேசும் அண்ணாமலையாலும் அவர்கள் ஈர்க்கப்படக்கூடும். ஸ்டாலினின் காவல்துறைக்கு பாஜக ஒரு நல்ல கேடயமாக இருக்கும். பாஜகவின் ஆதரவு, ஜெயலலிதாவுக்குப் பிறகு ‘அநாதையாகிவிட்ட’ தங்களுக்கு அரசுத்துறைகளில் வேலையை ‘விரைவாக முடிக்க’ உதவும் என்றும் அதிமுகவினர் நினைக்கக்கூடும்.

தங்களது தலைவர்கள் வலுவானவர்களாகவும் கம்பீர

## அடுத்த தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற அண்ணாமலை வாக்குறுதி!

கூர்மையான ஈட்டியாகவே அமைந்திருக்கிறது என்று சொல்லலாம். இதற்கு முன்பு ஸ்டாலின் அரசுக்கு எதிராக இதுபோல் எத்தனையோ வேறு வேறு பிரச்னைகளை அண்ணாமலை எழுப்பியிருக்கிறார். 20 ஆண்டுகளாக தமிழக சட்டசபையில் பூச்சியத்தில் தேங்கியிருந்த பாஜகவிற்கு மே மாத தேர்தல் வெற்றி முக்கியமானது என்றால், அதே தெம்புடன் ஸ்டாலின் அரசைக் கடுமையாகத் தாக்கிவரும் அண்ணாமலையின் சொற்கள், திராவிட நாட்டின் காவி உறுப்பினர்களிடையே பெரும் மன எழுச்சியைத் தந்திருக்கின்றன என்றே சொல்லலாம்.

தொலைக்காட்சிகளிலும் நாளிதழ்களிலும் செய்திகளைப் பின்தொடரும் மக்கள், ஸ்டாலின் தோட்டத்தில் ஒரு முள்ளாக, திமுக அரசுக்கு எதிராக பாஜக அண்ணாமலையின் பேச்சுக்களும் அந்தக் கட்சியினரின் போராட்டங்களும்தான் எதிர்க்கட்சியாக செயல்படுகின்றனவா என்று யோசிக்கத் தொடங்கியிருக்கின்றனர். தனது கூட்டணியில் உள்ள அதிமுக எடப்பாடி பழனிச்சாமியோடு ஒப்பிடும்போது, மாநில தலைவரான அண்ணாமலைக்கு இரு கூடுதல் சாதகங்கள் உண்டு. ஒன்று, டெல்லியிலிருந்து இந்தியாவை ஆளும் பாஜக தலைவர்களின் திடமான ஆதரவு, இரண்டாவது, அவரது மடியில் கனம் இல்லை. முந்தைய ஆட்சிக்காலத்தில் இருந்த அமைச்சர்கள் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி மீதான பொலிஸ் சோதனைகள் நினைவிருக்கிறதா?

அடுத்த தேர்தலில் தமிழ்நாட்டைக் கைப்பற்றுவதாக பாஜக தலைவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ள அண்ணாமலை, திமுக ஆட்சிக்கு எதிரான அவரது செயல்பாடுகளில் குறுக்கிடக் கூடாது என்ற வாக்குறுதியை டில்லி தலைவர்களிடம் கேட்டுப் பெற்றுள்ளார்.

எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா காலம் தொட்டு வானத்தில் பறந்து கொண்டு புகழ் வெளிச்சத்தில் இருந்த அஇஅதிமுக தலைவர்களும் கட்சித் தொண்டர்களும் இப்போது அதல பாதாளத்தில் இருக்கிறார்கள். மே மாத தேர்தல் தோல்விக்குப் பிறகு நடந்த நான்கு நிகழ்வுகள் அவர்களுக்கு மிகவும் மன உளைச்சலையும் குழப்பத்தையும் தந்திருக்கின்றன. சின்னம்மா சசிகலாவின் ‘இதோ வருகிறேன், உங்களையும் நமது கட்சியினையும் காப்பாற்றுவேன்’ என்ற சபதம் அவரது ஊழல் மீதான மக்களின் கசப்பையும் தாண்டி எந்த அளவிற்கு சாத்தியப்படும் என்ற யோசனை; தங்களது முன்னாள் அமைச்சர்கள்மீது ஸ்டாலினின் ஊழல் தடுப்புப் பிரிவு காவல்துறையினரின் முற்றுகைகள்; தலைவர்கள் எடப்பாடி-ஓபிஎஸ்ஸுக்கு இடையிலான பூசல்கள்; மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கின் சரிவும் பாஜகவின் செல்வாக்கு உயர்ந்திருப்பதும்.


மானவர்களாகவும் தன்னம்பிக்கை உள்ளவர்கர்களாகவும் இருக்கவேண்டும் என்பதையே தமிழக மக்கள் விரும்புகிறார்கள். உரக்கப் பேசுபவர்களாகவும் அதிகாரம் செய்பவர்களாகவும் இருக்கும் தலைவர்கள்மீது அவர்களுக்குக் கூடுதல் மோகம் உண்டு. ஜெயலலிதா ஒரு சிறந்த உதாரணம். அவர் கோபத்தில் கர்ஜித்து அரசியல் எதிரிகளைத் தாக்கும்போதெல்லாம் மக்கள் அவரைப் பாராட்டினார்கள். நன்கு படித்த, எல்லாம் தெரிந்த பத்திரிகையாளர்கள்கூட இந்திரா காந்தி, கோல்டா மியர், மார்சிரெட் தட்சர் ஆகியோருடன் ஜெயலலிதாவை ஒப்பிட்டு, இரும்புப் பெண்மணி என்று பாராட்டினார்கள்.

ஏப்ரல் 2014இல் பாராளுமன்றத் தேர்தல் நடந்தபோது, அவர் நரேந்திர மோடிக்கு எதிராக எழுப்பிய போர்க்குரல் நினைவிருக்கிறதா? புள்ளிவிவரங்களை அடுக்கிய அவர், குஜராத்தைவிடத் தமிழ்நாடு பல மடங்கு முன்னேறியிருக்கிறது என்று கூறி, “அஇஅதிமுகவா பாஜகவா, யாருக்கு உங்கள் ஆதரவு?” என்று வாக்காளர்களிடம் கேள்வி எழுப்பினார். “குஜராத்தின் மோடியா இந்த தமிழகத்தின் லேடியா” என்று கர்ஜித்தார். “நீங்கள்தான் அம்மா” என்று இடிமுழக்கமாக மக்கள் பதில் கூறினர். 39 இடங்களில் 37 இடங்களை அம்மாவுக்கே வழங்கினர், திமுகவுக்கு ஓர் இடம்கூடக் கிடைக்கவில்லை. பாஜகவுக்கு ஒரு தொகுதியிலும் பாமகவுக்கு ஒரு தொகுதியிலும் வெற்றி கிடைத்தது.

சிங்கம் அண்ணாமலையும் இப்போது அதே அரசியலைத்தான் செய்கிறார். ஸ்டாலின் அரசுக்கு எதிராக புதியபுதிய முழக்கங்களை உரத்த குரலில் கர்ஜிக்கிறார். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், தங்களது வழக்கமான கடுமையான பாணியில் திமுக அமைச்சர்கள் பதில் அளிப்பதில்லை, அவர்களது பதில்கள் மென்மையாகவே வருகின்றன. குற்றச்சாட்டுகளை சரிசெய்ய உடனுக்குடன் முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. இது, ஸ்டாலின் உத்தரவாக இருக்கக்கூடும். கருணாநிதியின் விரோத அரசியலும் தாக்குதலான பதில்களும், ஜெயலலிதாவிற்கு மக்கள் அனுதாபத்தைப் பெற்றுத்தந்ததோடு, அவருக்கு ‘தீய சக்தி’ என்ற எம்ஜிஆர், ஜெயலலிதா வழங்கிய பட்டத்தையும் மக்கள் மனதில் வலுப்படுத்தின. கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்ட ஸ்டாலின், இப்போதைக்காவது அண்ணாமலை மற்றும் பாஜக தொண்டர்களின் செயல்பாடுகளைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று நினைத்திருக்கக்கூடும். காலப்போக்கில் அண்ணாமலையின் ஆற்றல் குறைந்துவிடும் என்றும், தன்னைப் பொறுத்தவரையில் நல்ல நிர்வாகத்தோடும் மக்களை மையப்படுத்திய செயல்பாடுகளின்மூலம் ஆட்சியை இறுக்கிப் பிடிக்கலாம் என்றும் அவர் நினைத்திருக்கலாம். தன்னை சுற்றி நடக்கும் நல்ல விஷயங்களிலும் ஸ்டாலின் கவனம் செலுத்துகிறார். அவரது நேர்மறைக் கருத்துக்கள் சமூகத்தில் மேன்மையான எண்ணங்களை விதைக்கின்றன. நடிகர் சூரியாவின் சமீபத்திய படமான ‘ஜெய்பீமு’க்கு அவரது வாழ்த்து ஓர் உதாரணம்.

சில நாட்களுக்கு முன்பு படம் பார்த்து விட்டு ருவிட்டரில் கருத்து கூறிய ஸ்டாலின், ஜெய்பீம் பார்த்துவிட்டு இரவு இதயம் கனத்துப்போய் இருந்ததாகக் கூறினார். இத் திரைப்படம் சமூகத்தில் சாதி ஒடுக்குமுறையின் முகத்தில் அறையும் நிதர்சனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியதாகவும், ஒரு நல்ல வழக்கறிஞரும் நேர்மையான காவல்துறை அதிகாரியும் சேர்ந்து தீய சக்திகளுக்கு எதிராகப் போராடி, பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்கு நீதி வழங்கித் தரமுடியும் என்பதையும் படம் காட்டியிருப்பதையும் குறிப்பிட்டார்.

## “ஜெய்பீம் – படம் பாருங்கள்”



நிஜவாழ்வில் நடந்த சம்பவங்களை மையமாக வைத்து இப்படிப்பட்ட ஒரு படத்தைத் தயாரித்ததோடு, பாதிக்கப்பட்ட பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக பழங்குடியினர் பாதுகாப்பு சங்கத்துக்கு ஒரு கோடி நிதி வழங்கியதற்காகவும் சூர்யா மற்றும் அவரது மனைவியும் தயாரிப்பாளருமான ஜோதிகா இருவருக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

இந்தத் திரைப்படத்தைத் திரையரங்குகளில் வெளியிடாமல் சூரியாவும் ஜோதிகாவும் ஓடிடி தளமான ‘அமேசான் பிரைமி’ல் வெளியிட்டதை நீங்கள் அறிந்திருக்கலாம். கோவிட் அச்சத்தால் திரையரங்குகள் முடங்கிப்போயிருந்த நிலையில், தனது ‘சூரரைப் போற்று’ திரைப்படத்தை ஓடிடி தளத்தில் வெளியிட்டு, இதுபோன்ற தளங்களில் படத்தை வெளியிட்ட இந்தியாவின் முதல் நடிகர்களில் ஒருவராக சூர்யா இடம்பிடித்தார்.

நானும் என் மனைவி இந்துவும் ஜெய்பீம் திரைப்படத்தை இரண்டு முறை அடுத்தடுத்த நாட்களில் பார்த்தோம். இதுபோன்ற சிறந்த படங்கள் மிகவும் அரிது. காதல் பாடல்கள், அடிதடி சண்டை, அடிப்படையற்ற சோகக்காட்சிகள் போன்ற மசாலா அம்சங்கள் இல்லாத உண்மையான சினிமாவுக்கு நீங்கள் ரசிகர் என்றால், கட்டாயம் இந்தப் படத்தைப் பார்க்கவேண்டும். 1993இல் வழக்கறிஞராக இருந்தபோது காவல் நிலையத்தில் கொல்லப்பட்ட பழங்குடி இனத்தைச் சேர்ந்தவரின் மனைவிக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் போராடி நீதி கிடைக்கும்படி செய்த ஓய்வுபெற்ற நீதிபதி சந்துருவுக்கு ‘வாட்சப்’பில் வாழ்த்துச்செய்தி அனுப்பினேன். அவர் என் நண்பர் என்று என் மனைவியிடம் சொல்லும்போது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது என்றும் கூறினேன். அவர் உடனே ‘நன்றி’ என்று பதில் அனுப்பினார்.

இந்த ஞாயிற்றுக்கிழமை கொஞ்சம் கூடுதல் நேரத்தை ஏற்கனவே எடுத்துக்கொண்டேன். ஒருநாள் நீதிபதி சந்துரு பற்றி மட்டுமே ஒரு முழு கட்டுரையை இங்கு எழுதவேண்டும். அவரைப்போல் ஏழைகளுக்கு உதவும் நீதித்துறையினரும் நல்ல மனிதர்களும் இந்தக் காலத்தில் அரிதாகிப் போய்விட்டனர். இந்த வாரம் உங்களுக்கு சிறப்பானதாக அமையட்டும். வணக்கம்.

# வெளிநாடுகளுக்கு செல்வதற்கான ஆர்வம் அதிகரித்திருக்கின்றதா?

**“பொருளாதார ரீதியில் நாடு எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பதில் இளைஞர், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகமே, அவர்களை ஜனநாயக நாடுகளை நோக்கி பயணிக்கும் எண்ணத்தை ஏற்படுத்துவதற்கான காரணம் என கொழும்பு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் எம். கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.**



ரஞ்சன் அருண்பிரசாத்

இலங்கையில் 30 வருட யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், நாடு பொருளாதார ரீதியிலும், பாதுகாப்பு ரீதியில் முன்னேற்றம் அடைந்து வந்த பின்னணியில், 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர், மீண்டும் பல்வேறு பாதிப்புக்களை நாடு எதிர்நோக்க ஆரம்பித்தது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான காலப் பகுதியில் இலங்கையின் பிரதான வருமானமான சுற்றுலாத்துறை முற்று முழுதாக பாதிக்கப்பட்டது. இலங்கை பொருளாதாரத்தில் எந்தவித பாரிய பிரச்சினைகளும் இல்லாமல் இருந்த காலம் 2018 வரைதான். 2018ஆம் ஆண்டு இலங்கைக்கு 23.34 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகைத் தந்த நிலையில், அந்த எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு 19.14 லட்சமாக குறைவடைந்தது.

அதன்பின்னர், உலகையே அச்சுறுத்தும் கோவிட் வைரஸ் தாக்கம் இலங்கையின் பொருளாதாரத்தை முற்று முழுதாகவே பாதிப்படைய செய்தது. இலங்கைக்கு 2020ஆம் ஆண்டு 5.08 லட்சம் சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்துள்ளனர். இலங்கையின் பிரதான வருமான மார்க்கமாக விளங்கும் சுற்றுலாத்துறை மாத்திரமின்றி, ஏனைய அனைத்து துறைகளும் முற்று முழுதாகவே பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இலங்கையின் ஏற்றுமதி துறையும் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதையடுத்து, நாடு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதை, அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில், கடந்த சில மாத காலமாக கோவிட் பரவல் காரணமாக நாட்டில் பயணக் கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டிருந்தது.

இந்த பயணக் கட்டுப்பாடு கடந்த 31ஆம் திகதி அதிகாலையுடன் தளர்த்தப்பட்ட பின்னணியில், அன்று முதலே குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தை நோக்கி இளைஞர், யுவதிகள் அதிகளவில் படையெடுக்க ஆரம்பித்தனர்.

நூற்றுக் கணக்கான இளைஞர்கள் என்பதை விட, ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் நாட்டிலுள்ள அனைத்து குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலக வாசல்களிலும் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இவர்கள் வேறு நாடுகளை நோக்கி பயணிக்கும் நோக்குடன், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) பெற்றுக் கொள்வதற்காகவே குடிவரவு, குடியகல்வு திணைக்கள வாசல்களில் திரண்டுள்ளனர்.

“நாட்டிலுள்ள பெரும்பாலானோர் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்காகவே வெளிநாடுகளை நோக்கி பயணிக்கின்றனர். வெளிநாட்டவர்கள் களியாட்டங்களுக்காகவும், மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும் இலங்கைக்கு வருகைத் தருகின்றனர். இலங்கையில் பொருளாதார முன்னேற்றம் இருக்கமானால், இங்கு இருந்துக்கொண்டே பொருளாதாரத்திலும் வலுப் பெற்று, மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும். ஆனால் தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற முடியவில்லை. அதனாலேயே வெளிநாட்டிற்கு செல்ல முயற்சிக்கின்றோம்” என குடிவரவு குடியகல்வு திணைக்கள வாசலில் காத்திருந்த இளைஞர் ஒருவர் தெரிவிக்கிறார்.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் படகுகளில், சட்ட விரோதமாக இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு இலங்கையர்கள் தப்பிச் சென்றிருந்தனர். எனினும், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்வது பாரிய அளவில் குறைவடைந்திருந்தது. எனினும், இந்த கொரோனா தாக்கத்தின் பின்னரான தற்போதைய சூழ்நிலையில், சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பலரும் வெளிநாடுகளுக்கு செல்ல தயாராகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

**கடந்த கால தரவுகளுடனான ஒரு பார்வை**

2019ஆம் ஆண்டு 203,186 பேர் வேலைவாய்ப்பு பெறும் நோக்குடன் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தை மேற்கோள்காட்டி, இலங்கை மத்திய வங்கி 2019ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் தகவல் வெளியிட்டுள்ளது.

கொரோனா தாக்கம் பரவுவதற்கு முன்னதான 2018ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வேலைவாய்ப்பு நிமித்தம் 211,459 பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். 2017ஆம் ஆண்டு 211,992 பேர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக மத்திய வங்கி தெரிவிக்கிறது.

இவ்வாறு வேலைவாய்ப்புக்களுக்கு செல்வோரில் அதிகம் பேர் சவுதி அரேபியா, கத்தார், குவைத், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளுக்கே அதிகளவில் பயணிப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் குறிப்பிடுகின்றது. கடந்த ஆண்டுகளில் பதிவாகியுள்ள தகவல்களின் அடிப்படையில், முறையே சவுதி அரேபியா, கத்தார், குவைத், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளுக்கே அதிகளவிலானோர் பயணித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான பின்னணியில், கோவிட் அதிகளவில் தாக்கத்தை செலுத்திய 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாத்திரம், வேலை வாய்ப்புக்களுக்காக 53,713 பேர் மாத்திரமே வெளிநாடுகளை நோக்கி பயணித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளை மேற்கோள்காட்டி, இலங்கை மத்திய வங்கி 2020ஆம் ஆண்டறிக்கையில் தகவல் வெளியிட்டுள்ளது. இவ்வாறு வெளிநாடு பயணித்தவர்களில் 32,453 ஆண்களும், 21,260 பெண்களும் அடங்குகின்றனர்.

**கோவிட் தோற்றினால், புலம்பெயர் தொழிலாளர்கள் பாதிப்பு**

கோவிட் தொற்று காரணமாக இலங்கையிலிருந்து பணியாளர்களை பெற்றுக்கொள்ளும் நாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில், இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

2020ஆம் ஆண்டு முதலாவது கோவிட் அலையினால், இத்தாலி, தென்கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அதிகளவிலான இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பியிருந்ததையும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களில் 2020ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே குறைவளவான இலங்கையர்கள், வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்து, வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமையை, மத்திய வங்கியின் கடந்த கால ஆண்டறிக்கையில் ஊடாக காண முடிகின்றது. இவ்வாறான பின்னணியில், 2021ஆம் ஆண்டும் கொரோனாவினால் இலங்கை பாரிய தாக்கங்களை சந்தித்துள்ளது. இதனால், இலங்கையிலுள்ள நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக, வெளிநாடுகளை நோக்கி பயணிக்க தயாராகி வருகின்றனர். இதனால், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) பெற்றுக்கொள்வதற்காகவே, குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகங்களில் இளைஞர், யுவதிகள் வரிசையில் நின்றுக்கொண்டிருப்பதை காண முடிகின்றது.

**பொருளாதார நிபுணரின் பார்வை**

பொருளாதார ரீதியில் நாடு எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பதில் இளைஞர், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகமே, அவர்களை ஜனநாயக நாடுகளை நோக்கி பயணிக்கும் எண்ணத்தை ஏற்படுத்துவதற்கான காரணம் என கொழும்பு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

இலங்கையில் இதற்கு முன்னர் 1970ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே இளைஞர், யுவதிகள் இவ்வாறு வெளிநாடுகளை நோக்கி பயணிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டதாகவும், அன்று வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் குறைவாக காணப்பட்டதாகவும் அவர் நினைவுபடுத்தினார்.

அந்த காலப் பகுதியில் இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாடு செல்ல முடியாத காரணத்தினாலேயே, இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தி போராட்டம் நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டதாக அவர் கூறுகிறார்.

எனினும், இன்று வெளிநாடுகளுக்கு செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமையினால், தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்கு செல்ல தயாராகியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். இந்த இளைஞர், யுவதிகளின் எதிர்காலம், இலங்கையில் நம்பிக்கை அளிப்பதாக இல்லை என அவர் கூறுகின்றார்.

இலங்கையின் எதிர்காலம் தொடர்பிலான நம்பிக்கையை இழந்துள்ள இளைஞர்கள், யுவதிகள் இன்று வெளிநாடுகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிடுகிறார். இலங்கையில் முன்னரான காலப் பகுதியில் சிறுபான்மை இளைஞர்களே அதிகளவில் வெளிநாடுகளை நோக்கி செல்ல ஆர்வம் காட்டியதாக கூறிய அவர், இன்று நாட்டின் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களே வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்து வருவதாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் பதிலை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், அரச தரப்பிலிருந்து பதிலளிக்க எவரும் முன்வரவில்லை. ■



# 13ஐ காலவதியாக்குமா புதிய அரசமைப்பு?

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

இலங்கை தமிழர் அரசியலில் புதிய திருப்பங்களை அடையாளப்படுத்துவதாக இலங்கை தீவில் பல காட்சிகள் நடந்தேறி வருகின்றன. அதன் பிரதான கருப்பொருள் இலங்கைத் தீவில் இந்தியாவின் தலையீடு அல்லது செல்வாக்கு அல்லது நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் என்பதாகவே உள்ளது. 1987ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இந்தியா ஊடாக ஏற்படுத்தவொரு தரப்பு முயல, மறுதரப்பு உரையாடிய தகவல் எதனையும் வெளிப்படுத்தாது சூசகமாக அரச மைப்பு பற்றிய உரையாடலை வெளிப்படுத்தியிருந்தது. இந்தக் கட்டுரையும் தமிழ்த் தேசிய அரசியலில் முனைப்பு செலுத்தும் அரசியல் கட்சிகள் இந்தியா சார்ந்து முன்னெடுக்கும் நகர்வுகளையும் அதன் விளைவுகளையும் தேடுவனவாக உள்ளது.

முதலாவது, இலங்கை அரசியல் பரப்பில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான உரையாடல்கள் மீள ஆரம்பித்துள்ளன. மைத்திரி - ரணில் தேசிய அரசாங்கத்தில் இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கத்தை மையப்படுத்தி தமிழர்களுடைய இனப் பிரச்னைக்கான தீர்வு அரசமைப்பினூடாக ஏற்படுமென்று தமிழ்த் தரப்பு நம்பிக்கையளித்து வந்தது. அதனால், இலங்கை அரசாங்கத்துடனான நியாயப்பாடான விடயங்களையும் தமிழ்த் தரப்பு கோராது கைவிட்டிருந்தது. மீண்டும் அவ்வாறானதோர் உரையாடலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தலைமைகளும் முன்வைக்க ஆரம்பித்துள்ளன. அதேநேரம் ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் புதிய அரசமைப்பு உருவாக்க சூழல் ஏற்பட்டால் 13ஆம் திருத்தம் காணாமல் போய்விடுமென்றும் அதுவே இந்திய -இலங்கை உறவுக்கான அடிப்படை என்ற நோக்கிலும் அந்தத் தரப்புக்கள் 13இன் அமுலாக்கம் பற்றிய உரையாடலை நகர்த்துகின்றன. ஆனால், இலங்கை அரசாங்கம் என்பது அரசமைப்பு என்ற கோணத்தில் விவாதிக்கின்றபோது 13 மீதான அச்சுறுத்தல் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அதிக நெருக்கடிக்கு உள்ளாக்கும் என்பது கவனத்திற்குரிய விடயமாகும். இதற்கு ஆதாரமாக ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி தீவிர சிறுபான்மை எதிர்ப்புணர்வை கொண்ட தரப்பை தலைமையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றை அவதானிக்கும் போது 13ஆம் திருத்தம் காலாவதியாவற்கான வாய்ப்பு அதிகம் நிலவுகிறது. இதனாலேயே அதன் முக்கியத்துவம் பற்றிய உரையாடல் இந்தியாவின் நோக்கு நிலையிலிருந்து அதிகம் முதன்மைப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது, தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அல்லாத ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளும் முஸ்லிம் காங்கிரஸூம் தமிழ் முற்போக்கு கூட்டணியும் இணைந்து 13ஐ முழுமையாக அமுல்படுத்துதல் தொடர்பில் கோரிக்கை ஒன்றை இந்தியாவிடம் முன்வைத்துள்ளனர். இலங்கை தமிழரின் அரசியல் பிரச்னைக்கான தீர்வில் எஞ்சியிருக்கும் ஒரே விடயமாக 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தம் மட்டுமே காணப்படுகிறது. அத்தகைய 13 மிகப்பலவீனமான வடிவத்துக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசமாக காணப்பட்ட வடக்கு - கிழக்கு உயர்நீதிமன்றத்தால் துண்டாடப்பட்டதும், மாகாண சபைக்கான அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட்டதும் மேலும் அதன் பலவீனத்தைக் காட்டுகிறது. இத்தகைய நெருக்கடிமிக்க காலங்களைக் கடந்து குறைந்தபட்சம் கடந்த பத்தாண்டுகளில் 13ஆம் திருத்தம் பற்றிய முக்கியப்படுத்தல்கள் தற்போது தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து 13இனை வலியுறுத்துவது அதிக குழப்பத்தை உருவாக்குகிறது.

மூன்றாவது, இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றும் பேச்சாளரின் சந்திப்பு 28.10.2021அன்று கொழும்பில் இடம்பெற்றது. அச்சந்திப்பில் எத்தகைய விடயம் உரையாடப்பட்டதென முதன்மைப்படுத்தப்படாதபோதிலும், இலங்கையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்பு பற்றிய உரையாடல் முக்கியத்துவப்படுத்தப்பட்டதாக தெரிய வருகிறது. இத்தகைய உரையாடலுக்கூடாக இந்திய-இலங்கை உறவில் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை புதிய அரசமைப்பு நிராகரித்துவிடுமா என்ற எண்ணப்பாங்கு இந்திய தரப்பிடம் அதிகமாக மேலெழுந்துள்ளது. எனவேதான் அதற்கான உரையாடலும் அதற்கான செயல்பாடுகளும் வடக்கு - கிழக்கை மையப்படுத்தி தீவிரப்படுத்தப்படுகின்றது. இதனூடாக புதிய அரசமைப்புமீதான அச்சுறுத்தல் வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்புக்கு மாத்திரமின்றி இந்திய தரப்புக்கும் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை உருவாக்குகிறது.

நான்காவது, வடக்கு மீனவர்கள் இந்திய தூதருடனான சந்திப்பு ஒன்று 01.11.2021 அன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் மற்றும் மீனவ பிரதிநிதிகள், வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், தேசிய மீனவர் நல்லிணக்கத்துக்கான வடக்கு - கிழக்கு இணைப்பாளர் மற்றும் முல்லைத்தீவு அன்னை வேளாங்கண்ணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்த சந்திப்பில் வடக்கில் - அண்மையில் இந்திய மீனவர்களுக்கு எதிராக நடந்த போராட்டத்திற்கு பதிலாகவும் அதன் பலவீனங்களை சரிசெய்யும் உத்தியோடும் மேற்கொள்ளப்பட்டதாகவே தெரிகிறது. ஆனாலும் இந்திய தரப்பும் அதேபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மீனவர் தொடர்பான விவகாரத்தை சுமூகமாக கையாளுவதற்கான உத்திகளை பின்பற்றுவதான பொறிமுறை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் இத்தகைய சந்திப்பிற்கூடாக இலங்கை அரசியலில் அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு அரசியலில் இந்தியாவின் செல்வாக்கை பாதுகாப்பதில் கரிசனை கொள்வதாகவே தெரிகிறது.

எனவே, மேற்குறித்த நகர்வுகள் ஒவ்வொன்றும் இலங்கை - இந்திய உறவில் முக்கிய பரிந்துரையாகக் காணப்படுகிறது. அத்தகைய பரிந்துரைகள் பலவீனமானதாகவும் அதனை கடந்து செல்லக்கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்தப்படாமை தெரிகிறது. எனவே, அதனை கருத்தில் கொண்டு தமிழ்த் தரப்பு வடக்கு - கிழக்கிலும் இலங்கை முழுப்பகுதியிலும் தனித்துவமான அணுகுமுறைகளை பின்பற்றுவதோடு இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான சூழலை எவ்வாறு கையாளுதல் என்பதனை முதன்மைப்படுத்த வேண்டும்.

அதனடிப்படையில் ஒன்று, பலவீனமான 13இற்காக போராடுவதை விட்டு பலமான 13இற்கான கோரிக்கைகளை முன்னெடுப்பதோடு அதற்கான பிரகடனங்களையும் கோரிக்கைகளையும் தமிழ் பேசும் சக்திகளோடு உரையாடுவதற்கு முயலுதல் வேண்டும் அதற்காக எதிர்கால கூட்டத்தொடர்களில் அவற்றை முன்மொழிதல் அதற்கான திட்ட வரைவுகளை உருவாக்குதல் அவசியமானது ஒன்றாகும். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களின் நலன்களை முழுமைப்படுத்த வேண்டுமாயின் கூட்டான அரசியல் அணுகுமுறைகள் அவசியமானதாகும். அதிலும், தென்னிலங்கையோடு பயணித்த முஸ்லிம் காங்கிரஸூம், தமிழர் முற்போக்கு கூட்டணியும் இணைந்திருப்பது ஓர் ஆரோக்கியமான வாய்ப்புக்களை பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாகும். இதனை முழுமையாக கட்டமைத்து வடக்கு - கிழக்கில் நிகழ்கின்ற அனைத்து ஆக்கிரமிப்புக்களையும் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் கூட்டாக போராடுவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியும். கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு இத்தகைய கூட்டுக்களை பலப்படுத்தும் விதத்தில் வரைவுகளுக்கூடாக நகர்த்தப்படுதல் அவசியமானதாகும். அதுமட்டுமின்றி அத்தகைய வரைவுகள் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரமின்றி வேறு சக்திகளுக்கும் அல்லது தேர்தலுக்கும் அல்லது பிராந்திய சர்வதேச சக்திகளுக்கும் சேவை செய்யாது பாதுகாத்து கொள்ளுதல் வேண்டும்.

இரண்டு, புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சி 13இனை காலாவதியாக்கும் என்ற எண்ணப்பாங்கு இந்திய தரப்பிடமும் காணப்படுகின்றது என்பது அவர்களின் சந்திப்புக்களிலும் உரையாடல்களிலும் தெரிகிறது. அதாவது, 13 காலாவதியாதல் என்பது வடக்கு - கிழக்கு மீதான இந்தியாவின் செல்வாக்கை மேலும் பின்னடைவுக்கு உட்படுத்தும். எனவே, இந்தியாவுக்கு அதனை தடுத்து நிறுத்துவதற்கான அவசியப்பாடு எழுந்துள்ளது. அதனால் அதனைப் பாதுகாக்க அது முயலுகின்றபோது 13பிளஸ் பற்றிய உரையாடலை அல்லது 13இற்கு அப்பால் செல்லுகின்ற உரையாடலை தமிழ்த் தரப்பு முன்னெடுக்க வேண்டும்.

இதனை ஆதாரப்படுத்தம் விதத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்பில் சமர்ப்பித்த வரைவு ஆவணத்தில் உயர்ந்தபட்ச சமஷ்டி கட்டமைப்பின் கீழ் அதிகாரப் பகிர்வே நிரந்தர தீர்வாகும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, இவ்வகை உரையாடல்களை வரைவுகளாக்குவதோடு அவற்றை இந்திய தரப்பிடம் ஒப்படைத்து அதற்கான உரையாடலை தொடக்கி காலவரையறையை குறிப்பிட்டு அமுல்படுத்துவதற்கான செயல்பாடுகளை முன்னகர்த்த வேண்டும். புதிதாக உருவாக்க திட்டமிடும் அரசமைப்பில் அவ்வகை கோரிக்கைகள் முழுமைப்படுத்தப்பட்டு வரைவுகளும் உள்ளடக்கப்பட இந்திய அனுசரணையை அடிப்படையாக கொண்டு நடவடிக்கைகளை தொடக்க வேண்டும்.

எனவே, இந்தியா இலங்கை அரசியலில் அண்மைக் காலமாக முன்னெடுத்துவரும் நகர்வுகள் வலிமையானவையாகக் காணப்படுகின்றன. 2020 டிசெம்பரில் இந்திய பாதுகாப்பு செயலாளர் வருகையிலிருந்து தொடங்கிய இலங்கை - இந்திய உறவுக்கான நகர்வு 2021 செப்ரெம்பர் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் வருகையோடு பலமடைந்துள்ளது. இது சீனாவுக்கு ஒரு நெருக்கடியையும் இலங்கை - சீன உறவில் விரிசலை உள்ளார்ந்த ரீதியில் ஏற்படுத்துவதிலும் இந்தியாவிற்கு வெற்றியை தந்துள்ளது. ஆனால் இலங்கை தரப்பு இதனை எவ்வாறு கையாளப்போவதென்பது அதன் அண்மைய நகர்வுகளில் புலப்படுகிறது. இந்தியாவை அணைத்துக்கொண்டு உள்நாட்டில் தனது நலன்களை முதன்மைப்படுத்துவதோடு வடக்கு - கிழக்குமீதான ஆதிக்கத்தை அதீதமாக முதன்மைப்படுத்த முனைகிறது. ஆனால், இந்தியா தென்னிலங்கையோடு ஒத்துழைத்தல் என்பது வடக்கு - கிழக்கு இந்தியாவுடன் நெருக்கமாக இருக்கும் சூழல் நிலவும் வரையுமே தென்னிலங்கை இந்தியாவோடு புரிதலை வெளிப்படுத்தும்.

எனவேதான், வடக்கு-கிழக்கு மீதான இலங்கை அரசின் பலவீனப்படுத்தும் நிகழ்வுகளை இந்தியா கருத்தில் கொள்வதும் அதனூடாக வடக்கு - கிழக்கு தமிழர்களின் தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை எட்டுவதும் தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறையாக அமைதல் அவசியமாகும். ■




# அவுஸ்திரேலியாவை பதினெட்டு நாட்களாக உறையவைத்த மர்மம்

**ப.தெய்வீகன்**

அவுஸ்திரேலியாவை கடந்த பதினெட்டு நாட்களாக உறையவைத்திருந்த மர்மம் துலங்கியிருக்கிறது. இதனை "அவுஸ்திரேலிய தீபாவளி" என்று சொன்னால்கூட தவறில்லை.

கடந்த ஒக்டோபர் 16 ஆம் திகதி, மேற்கு அவுஸ்திரேலியாவின் Blowholes பகுதியில் சூரிய அஸ்தமானம் பார்ப்பதற்காக பெற்றோருடன் சென்றிருந்த நான்கு வயது சிறுமியான கிளியோ ஸ்மித்தை, அடுத்தநாள் எழுந்து பார்த்தபோது காணவில்லை. பதறியடித்துக்கொண்டு தாங்கள் தூங்கிய கூடாரத்தின் சுற்று வட்டாரமெங்கும் தேடிய பெற்றோர், அலுத்துப்போய் பொலீஸிடம் முறையிட்டார்கள்.

கூடாரத்தில் படுத்திருந்த சிறுமி, இரவில் எழுந்து தவறுதலாக எங்காவது சென்றிருப்பாள் என்று தேடத்தொடங்கிய பொலீஸாருக்கு, மதியமானபோது சாதுவாக வியர்க்கத் தொடங்கியது. விஷயம் கொஞ்சம் விபரீதமாகத் தெரிவதைப் புரிந்துகொண்டார்கள். உடனடியாக மேலதிக பொலீஸாரை அழைத்தார்கள். ட்ரோன்கள், ஹெலிக்கொப்டர்கள் உதவியோடு தேடுதலை நீட்டினார்கள்.

இரண்டாவது நாளும் தேடுதல் நீண்டபோது, சிறுமி தொலைந்த செய்தி கிட்டத்தட்ட அவுஸ்திரேலிய ஊடகங்கள் அனைத்தினதும் காதுகளில் எட்டிவிட் டது.

சிறுமியின் பெற்றோர் ஊடகங்களின் முன்னால் வந்து கண்ணீர் மல்க பேட்டி கொடுத்தார்கள். தங்களது மகள் கடைசியாக அணிந்திருந்த ஆடை நிறத்தையும் அவளது படத்தையும் காண்பித்து, எப்படியாவது கண்டுபிடித்துத் தருமாறு இறைஞ்சினார்கள். அவுஸ்திரேலிய ஊடங் கள் அனைத்திலும் சிறுமி தலைப்புச் செய்தியானாள். புன்னகை வழியும் சிறு மியின் படங்கள் மேற்கு அவுஸ்திரேலியா வின் குச்சொழுங்கை - குறுக்குப்பாதை என்று எல்லா இடங்களிலும் "காண வில்லை" - என்ற ஒற்றைத்துயரத்தோடு தொங்கியது.

நாட்கள்தான் கடந்தனவே தவிர, சிறுமி பற்றிய சிறு தகவலைக்கூட யாராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. மேற்கு அவுஸ்திரேலிய பொலீஸை அவுஸ்திரேலிய சமூக வலைத்தள பிரிகேடியர்கள் மற்றும் மேஜர் ஜெனரல்கள் வறுத்தெடுத்தார்கள். "தொப்பியும் தொப்பையும்..ஆக்களைப் பாரு" - என்று கிழித்தார்கள். பொலீஸை துவைத்தவர்கள் அரசாங்கத்தை சும்மா விடுவார்களா? மேற்கு அவுஸ்திரேலிய முதல்வரையும் புடைக்கத் தொடங்கினார்கள்.

ஒக்டோர் 21 ஆம் திகதி காலை, ஊடகங்களின் முன்னால் வந்த மேற்கு அவுஸ்திரேலிய முதல்வர் "சிறுமி கிளியோ ஸ்மித் பற்றி தகவல் தருபவர்களுக்கு பத்து லட்சம் டொலர் சன்மானம் தரப்படும்" - என்றார்.

மக்கள் தமக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தையும் பொலீஸிடம் ஒப்புவித்தார்கள். பொலீஸாரும் தடயவியல் நிபுணர்களும் இணைந்து கிளியோ ஸ்மித் பயன்படுத்திய பொருட்களை வைத்து வெற்றிலையில் மைபோட்டு தேடிக்கொண்டிருந்தார்களே தவிர, எந்த முன்னேற்றமும் தெரியவில்லை.

இரண்டு வாரங்கள் கடந்தன.

மேற்கு அவுஸ்திரேலியாவை மாத்திரமில்லாமல் சிறுமி கிளியோ ஸ்மித் மீண்டுவரவேண்டும் என்று பிரார்த்தித்த எல்லோருக்கும் பதற்றம் அதிகரித்துவிட் டது. ஏனெனில், கூடாரத்திலிருந்து தனியாக எங்காவது சென்று

> **சிறுமியின் பெற்றோர் ஊடகங்களின் முன்னால் வந்து கண்ணீர் மல்க பேட்டி கொடுத்தார்கள். தங்களது மகள் கடைசியாக அணிந்திருந்த ஆடை நிறத்தையும் அவளது படத்தையும் காண்பித்து, எப்படியாவது கண்டுபிடித்துத் தருமாறு இறைஞ்சினார்கள். அவுஸ்திரேலிய ஊடங்கள் அனைத்திலும் சிறுமி தலைப்புச் செய்தியானாள்.**

தவறியிருந் தால், இரண்டு வாரங்களுக்கு சிறுமி உணவின்றி தாக்குப்பிடித்திருப்பாளா என்ற சந்தேகம் ஒருபுறம் வலுத்தது. மறுபுறத்தில், யாராவது கடத்திச் சென்றிருந்தால், இரண்டு வாரங்களில், கடத்திய நோக்கத்தை நிறைவேற்றியிருப்பார்களோ என்று பெரும்பீதி நடுங்க வைத்தது. சிறுமி உயிரோடு மீளுவது கடினம் என்பது கிட்டத்தட்ட பலருக்குத் தெரிந்தவிட்டபோதும், வெளியில் சொல்லமுடியாதவர்களாக தேடுதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். சிறுமியின் புன்னகையை பார்க்கப் பார்க்க மேலும் மேலும் துயர்சூழத் தொடங்கியது.

நவம்பர் மாதம் 3 ஆம் திகதி - புதன் கிழமை நடுநிசி தாண்டி ஒரு மணி.

மேற்கு அவுஸ்திரேலியாவின் Carnarvon பகுதியிலுள்ள வீட்டின் ஜன்னல்களையும் கதவினையும் உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்தது பொலீஸ்.

அங்கு பொம்மைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை பார்த்து, "உங்களது பெயர் என்ன" - என்று மெதுவாக கேட்டது பொலீஸ்.

"எனது பெயர் கிளியோ" - என்று படங்களில் தெரிந்த அதே புன்னகையோடு பதிலளித்தாள் அந்தச் சிறுமி.

அந்த வீட்டிலிருந்து 36 வயது நபரை உடனடியாகவே விலங்கிட்டு, இழுத்துச்சென்றது பொலீஸ்.

சிறுமி தொலைந்த செய்தி போலவே, சிறுமி கிடைத்த செய்தியும் புதன் கிழமை காலை அவுஸ்திரேலிய வானில் பட்டசுகளாக வெடித்தது. முழுத் தேசமும் பெருமூச்சுவிட்டது. ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

சிறுமி கிளியோ ஸ்மித்தை உடனடியாக பெற்றோரிடம் சேர்ப்பித்து, அவர்களுடன் அவளை வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற பொலீஸார், சிறுமிக்கு உடல் ரீதியாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதிசெய்திருக்கிறார்கள். அவள் வைத்தியசாலை கட்டிலில் குச்சி ஐஸ் வைத்துக்கொண்டு புன்னகைக்கும் புகைப்படத்தையும் பெற்றோரின் அனுமதியுடன் வெளியிட்டு, அவளுக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் பொலீஸார் அறுதல் அளித்துள்ளார்கள்.

பதினெட்டு நாட்களுக்குப் பின்னர், கிளியோ நேற்று தனது பெற்றோருடன் உறங்கினாள். மேற்கு அவுஸ்திரேலிய முதல்வர் கிளியோவின் வீட்டுக்குச் சென்று பாபி டோல் பரிசளித்திருக்கிறார்.

சிறுமி கிளியோ ஸ்மித்தை, தங்களது விசாரணைகளின் விளைவாகவே மீட்டதாக கூறியுள்ள பொலீஸார், அரசு அறிவித்த சன்மானம் யாருக்கும் தரப்படமாட்டாது என்று கூறுகிறார்கள். ஆனால், சிறுமியைக் கடத்தி வைத்திருந்தவனின் வீட்டுக்கு பக்கத்து வீட்டிலிருந்தவர், தான் பொலீஸாருக்கு முக்கிய தகவலொன்றை சொன்னதாகவும் தங்களது வீட்டுக்கு பக்கத்தில் தனியாக வசித்து வந்த நபரின் நடத்தைகளில் தான் சந்தேகம் கொண்டதாகவும் அவர் அங்காடியில் சென்று சிறுவர்களுக்கான பம்பஸ்கள் வாங்கியதை கண்டதாகவும் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார். ஆக, இந்த நபருக்கு பத்து லட்சம் டொலர்களைக் கொடுக்கவேண்டும் என்று தற்போது சமூக வலைத்தள ஆதரவு அமைப்பு ஒன்று கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருக்கிறது.

இதேவேளை, சிறுமியை கடத்தியவன் யார்? 18 நாட்களாக சிறுமியை கடத்திவைத்து என்ன செய்தான்?

சிறுமியை கடத்திய 36 வயதான Terry Kelly, தனது பாட்டியோடு குறிப்பிட்ட வீட்டில் வசிந்து வந்தவன். பாட்டி அண்மையில் இறந்துபோன பிறகு Terry Kelly தனிமையில்தான் வாழ்ந்து வந்திருக்கிறான். கிளியோ ஸ்மித்தை குறிப்பாகக் கடத்திய காரணம் என்பதை முப்பது மணிநேரமாக விசாரணை செய்து இவனை நீதிமன்றத்தில் கொண்போய் நிறுத்தியிருக்கிறார்கள் பொலீஸார்.

அத்துடன் மேலதிக தகவலொன்றையும் வெளியிட்டுள்ளார்கள்.

Terry Kelly வீட்டை முழுமை யாக சோதனை செய்தபோது, வீட்டின் ஒரு அறை முழுவதும் பொம்மைகளை யும் பொம்மை படங்களையும் பொலீஸார் மீட்டிருக்கிறார்கள். சுவர் முழுவதும் பொம்மை படங்களை ஒட்டியும் அவற்றுக்குக் கீழ் - இணையத்தில் ஓடர் செய்து வாங்கிய - அழகிய பொம்மைகளை அழகாக அடுக்கியும் வைத்திருக்கிறான் Terry Kelly. இவனுக்கு பல சமூகவலைத்தள கணக்குகள் உள்ளன என்றும் அந்த கணக்குகளில் சென்று தேடியபோது, பொம்மைகளோடு சேர்ந்து நின்று எடுத்த படங்களை Terry Kelly பதிவேற்றியிருக்கிறான் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது Terry Kelly பிணை கோரவில்லை. முழுமையான விசாரணை முடியும்வரைக்கும் தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தடுப்புக்காவலில் கொண்டுபோய் போட்டபோது, வுநசசல முநடடல யார் என்பதை அறிந்த சக கைதி, அடித்து மண்டையை உடைத்துவிட்டான். Terry Kelly உடனடியாக, வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் சிகிச்சையளித்தபிறகு, தடுப்புக்காவலில் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள் பொலீஸார். இரண்டாம் தடவை, இன்னொரு கைதி, இவனை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறான்.

தற்போது, Terry Kelly காயத்தோடும் விசாரணையோடும் போராடிக்கொண்டிருக்கிறான்.


இதேவேளை, Terry Kelly பெயரிலான அவுஸ்திரேலிய அபொறிஜினல் ஆதிக்குடியைச் சேர்ந்த மேற்கு ஆஸ்திரேலிய நபர் ஒருவர், "சிறுமியைக் கடத்தியது தான் என்று நம்பிக்கொண்டு, கொஞ்சப்பேர் தனக்கு தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல் விடுப்பதாகவும் எனது பெயரும் சிறுமியை கடத்தியவன் பெயரும் ஒன்றாக இருப்பதற்கு நான் என்ன செய்வேன் என்றும்" பொலீஸ் பாதுகாப்பு கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது. ■

## பயணங்கள்!

- மாலி -

9

# 'எனது தோல் நிறம் வெள்ளை அல்ல'


புதுவை இரத்தினதுரை

எல்லாமே மறந்தாச்சு; எல்லோருமே மறந்தாச்சு!

மறப்பதும் சிலது நல்லதுதான் ஆனால், எல்லாவற்றையுமே மறந்துவிடுவதும் நல்லதுதானா?

கொரோணா சிக்கலுக்குள் சிக்குண்டு தங்கிவிட்டபோது, யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டாவது கொரோணா தடுப்பூசிக்காக கொழும்பு சென்றுவந்தவேளை நினைவில் வந்ததை எழுத நினைந்தது, இரண்டு மாதங்கள் - எட்டு வாரங்கள், 'பயணங்கள்' என்று இங்கு தொடர்ந்தது. பயணங்கள் நிறைய உண்டு. ஆனால், அவற்றில் அடைந்த பயன்கள் என்ன?

எப்படியோ, இப் பயண நினைவுகள், ஒரு காலத்தை நினைவில் கொணர்ந்திருக்கும் உணர்த்தியிருக்கும். லண்டனிலிருந்து வெளியான 'நாழிகை' சஞ்சிகையில் அப்போது வெளியானவை இவை. 'குமுதம்' இதனை மறுபிரசும் செய்திருந்தது. மாலன் அப்போது 'குமுதம்' சஞ்சிகையின் ஆசிரியராகவிருந்தார்.

பயணத்தில் எழுதப்படாதவையும் உண்டு. நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்படுவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்னதாக அந்த மாதத்து 'நாழிகை' சஞ்சிகை யாழ்ப்பாணத்தை அடைந்திருக்கும் என்று,கொழும்பில் சஞ்சிகையின் இலங்கை விநியோகஸ்தர்களான பி. எஸ். சுந்தரம் முகவர்கள் என்னிடம் சொன்னார்கள். அந்த ஆவலில், யாழ்ப்பாணம் வந்தடைந்த சிறிது நேரத்திலேயே நகரில் பூபாலசிங்கம், மற்றும் கடைகளில் போய்ப் பார்த்தேன். ஓரிடத்திலும் சஞ்சிகையைக் காண வில்லை. விசாரித்ததில், புலிகள் தடைவிதித் திருப்பதாக சொன்னார்கள்.

காரணத்தை தெரிந்துகொள்ள முடியவில்லை.

யாழ்ப்பாணத்து நிலவரம், நடப்புகள், புலிகளின் செயல்பாடுகள் எதுவுமே தெரியாது. ஆனால், சஞ்சிகை ஏன் தடைசெய்யப்பட்டது? அது தெரிய வேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது. யாரிடம் அறிவது?

மாவட்ட செயலாளராகவிருந்த செங்கை ஆழியானுடன் பேசிப்பார்க்கலாம் என்ற அபிப்பிராயத்தில், உடனேயே கலைஞர் வேல். ஆனந்தனுடன் செங்கை ஆழியான் வீட்டுக்கு சென்றேன். புதுவை இரத்தினதுரையைச் சந்திக்கும்படி அவர் சொன்ன ஆலோசனையில், புதுவை இரத்தினதுரையின் இல்லத்து முகவரியைபெற்று திரும்பினோம்.

காலை 7 மணிக்கெல்லாம் நல்லூரில் அவரின் இல்லத்துக்கு சென்றபோது, அலுவலகத்துக்கு போய்விட்டார் என்று சொன்னார்கள். கோண்டா விலில், பலாலி வீதியில் ஓரில்லத்தில் இருந்தது புலிகளின் கலை பண்பாட்டு துறை அலுவலகம்.

புதுவை இரத்தின துரையை பரஸ்பரம் அறிந்திருந்ததல்லாமல், நேரில் சந்தித்ததில்லை. என்னளவில், சஞ்சிகையின் உள்ளடக்கம் தொடர்பில் தெளிவிருந்தது, துணிவிருந்தது. யமுனா ராஜேந் திரனின் கட்டுரை தொடர்பில்தான் ஒரு யூகம் இருந்தது.

அறிமுகப்படுத்தியதும் இதமாகவே வரவேற்ற புதுவை இரத்தினதுரை, சீறிப் பாய்ந்தார். தூஷண வார்த்தைகளும் வந்தன. என் யூகம் சரியானது. ஜமுனா ராஜேந்திரனின் கட்டுரைதான் என்பது தெரிந்ததும், நான் என்னை உசார்படுத்திக்கொண் டேன். 'சஞ்சிகையின் ஆசிரியர் என்பதில், நானே அதற்குப் பொறுப்பானவன். என் பொறுப்புணர்வுடன்தான் நான் அதனைப் பிரசுரித்தேன். பத்திரிகைத் தர்மத்துக்கு புறம்பாக அது இல்லை' என்று, அமைதியாகவே அவரை சமரசப்படுத்திக்கொண் டேன்.

புதுவை இரத்தினதுரை அந்நியமாகிவிட்டார். வாகனம் வேண்டுமா? என்ன தேவையா னாலும் தெரிவியுங்கள். எங்கு வேண்டுமானாலும் நீங்கள் செல்லலாம் என்று சொன்னார்.

ஒரு தேவையைத்தான் நான் நினைத்தேன். பிரபாகரனைச் சந்திக்கவேண்டும் என்று கேட் டால், என்னைப்பற்றி ஒருமாதிரி யாகத்தான் நினைப்பார்கள். அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தேன்.

அவர் இப்போது யாழ்ப்பா ணத்தில் இல்லை. வந்ததும் ஏற்பாடு செய்வதாக சொன்னார்.

வெளிநாட்டு பத்திரிகையா ளர்கள் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து செல்வதாக செய்திகள் வந்தன. அன்ரன் பாலசிங்கத் துக்கு தகவல் தெரிவித்திருப்ப தாக புதுவை தொலைபேசியி லும் நேரிலும் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால், எனக்கு அது சந்தேக மாகவே இருந்தது. புறப்படு வதற்கு முதல் நாளும் அதே கதைதான் சொன்னார். "பரவா யில்லை; என் தோல் நிறம் வெள்ளை அல்லவே" என்று கூறிவிட்டுக் கிளம்பினேன்.

'பிரபாகரன் என்னை அறிவார்' என்று யாரிடமேனும் சொல்லமுடியுமா? அதற்காகத்தான் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க முயற்சித்தேன்.

1982 ஜனவரியில், பிரபாகரனை மதுரையில் சந்தித்து திரும்பியபோது, கொழும்பு அமெரிக்க தூ தரகத்தில் பத்திரிகை அலுவலராக பணியாற்றிக் கொண்டிருந்த நண்பர் சந்திரசேகராவுடன் தூதரகத் துக்கு முன்னாலிருந்த தேநீர்க் கடையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது அவர் சொன்னதும், அவரின் அந்த முகத் தோற்றமும், பிரபாகரன் கதைவரும் வேளைகளில் நினைவில் வருவதுண்டு.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பதற்றத்துடனும் எச்சரிக்கையுடனும் மெதுவாக , "ஐசே, இதை ஒருவ ரிடமும் சொல்லாதையும். உம்மைக் கொண்டு போய்விடுவார்கள்." - உண்மைதான், தேடப்படும் பிரபாகரனுக்கான தகவல்களுக்கு தகுந்த சன்மானம் என, சுவரொட்டிகள் அப்போது இலங்கையில் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

'பிரபாகரனைச் சந்தித்தேன் அவருடன் தேநீர் அருந்தினேன், சாப்பிட்டேன்' என்றும் அந்த பயண கட்டுரையில் சேர்ப்பதற்கு நான் விரும்பினேனா?

மதுரையில் பிரபாகரன் சொன்ன விஷயம் ஒன்று, வெகு விரைவாகவே பாண்டி பசாரில் நடந்தேறியது. ஆனால், அமிர்தலிங்கம் சமாச்சாரம் அப்படியான ஒன்றல்ல.

ஆக, இவைகள் எல்லாமே கதைகளாகவே ஆக்கிவிடுவதற்குத்தான் இன்றைய அரசியல்வாதிகள் அரசியல் செய்கிறார்கள் என்பதுதான் எழுகின்ற ஆதங்கம்.



தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகையாக வலம் வருபவர் ஹன்சிகா. இவரின் நடிப்பில் 50ஆவது திரைப் படமாக மஹா என்ற திரைப்படம் வெளியாக வுள்ளது.

உடல் எடையை வெகுவாகக் குறைத்த ஹன்சிகா, அவ்வப்போது சமூக வலைதளங்களில் தனது கவர்ச்சி படங்களையும் பதிவேற்றி வந்தார். இந்த நிலையில் தற்போது கடற்கரையில் கவர்ச்சி உடையில் அவர் அளித்திருக்கும் போஸ் ரசிகர்களின் விருப்புகளை அள்ளிக் குவித்து வருகிறது.



தீபாவளிக்கு அண்ணாத்த, ஜெய்பீம், எனிமி மற்றும் சாம்லின் ஆபரேஷன் ஜூஜூபி என நான்கு படங்கள் வெளியாகின. ஆபரேஷன் ஜூஜூபி தவிர்த்து மற்ற மூன்று படங்களில் நடிகர் பிரகாஷ் ராஜ் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார்.

கடந்த வருடம் ஒரு படத்தில் மட்டுமே பிரகாஷ் ராஜ் நடித்திருந்தார். ஆனால், தீபாவளிக்கு அவர் நடித்த 3 படங்கள் வெளியாகின. இவ்வாறு முக்கிய பண்டிகை தினத்தில் அவரின் 3 படங்கள் வெளியானமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.



'டாக்டர்' படத்தில் நடித்தபோதே சிவகார்த்திகேயனின் 'டான்', சூர்யாவின் 'எதற்கும் துணிந்தவன்' படங்களில் ஒப்பந்தமாகி வியப்பை ஏற்படுத்தியவர் பிரியங்கா மோகன்.

'டாக்டர்' படம் வெற்றி பெற்றாலும்கூட படத்தில் பிரியங்காவுக்குச் சொல்லும்படியாக நடிப்பு வாய்ப்பு இல்லை. அவருடைய முழு நடிப்புத் திறமையை வெளிக்காட்டும்விதமாக 'டான்', 'எதற்கும் துணிந்தவன்' படங்கள் இருக்கும் என்கிறார்கள்.

# திரை விமர்சனம்

திரைப்படம் - அண்ணாத்த
இயக்கம் - சிவா
இசை - இமான்
நடிப்பு - ரஜினிகாந்த், நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், மீனா, குஷ்பு, சூரி மற்றும் பலர்




ரஜினிகாந்த் நடிக்கும் படம் என்றாலே தங்களுக்கு கொண்டாட்டமாக இருக்க வேண்டுமென ரஜினி ரசிகர்களிடம் எப்போதுமே ஓர் எண்ணம் இருக்கும். அண்மையில் வந்த சில படங்கள் வேறுமாதிரியாக அமைந்த நிலையில், ரஜினியை கொண்டாடும் படமாக வந்துள்ளது அண்ணாத்த...!

ஊரும் உறவினரும் கொண்டாடும் அண்ணாத்த ரஜினிகாந்த். தங்கை கீர்த்தி சுரேஷ்மீது அதீத பாசம் வைத்துள்ளவர். அண்ணன் சந்தோசமே தனது சந்தோசம் என தனது காதலை மறைத்து அண்ணன் ரஜினி பார்க்கும் மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறார். ஆனால், காதலனின் சூழ்நிலை அவரை திருமணத்திற்கு முதல் நாள் காதலனுடன் ஓட வைக்கிறது. தங்கை ஏன் ஓடிப் போனாள் என்பதை அறிந்து அண்ணன் ரஜினிகாந்த் தங்கையைத் தேடி கொல்கத்தா போகிறார். அங்கே, தங்கை ஏழ்மை நிலையில் பெரும் சிக்கலில் இருக்கி றார். அது ஏன், அண்ணாத்த தங்கைக்காக என்ன செய்தார் என்பதுதான் படத்தின் உச்சக்கட்டம்.

ரஜினி ரசிகர்களுக்கு என்னவெல்லாம் பிடிக்குமோ அவ்வளவையும் படத்தில் சேர்த்துள்ளார் இயக்குநர் சிவா. மற்றும்படி கதைக்காக பெரிதாக யோசிக்க வில்லை. முதல் பாதியை விஸ்வாசம் படத்தையும், இரண்டாவது பாதியை வேதாளம் படத்தையும் கலந்து உருவாக்கியுள்ளார்.

70 வயதிலும் ரஜினியின் புத்துணர்வு ஆச்சரியப் பட வைக்கிறது. நகைச்சுவை காட்சிகளிலும் ரஜினியின் நடிப்பு அபாரம். இடைவேளை வரை முத்து படத்தின் ரஜினியை நினைவூட்டுகிறார். பின்னர், பாட்ஷா, படையப்பா படங்களின் பாணியில் சண்டைக் காட்சிகளில் அசத்துகிறார். அண்ணன் - தங்கை பாசத்தை வெளிப்படுத்தும் உணர்வு காட்சிகளில் ரசிகர்களையும் கலங்க வைக்கிறார்.

ரஜினிக்கு இணை என்பதை தவிர நயன்தாரவுக்கு படத்தில் எந்த முக்கியத்துவமும் இல்லை. பார்த்ததும் காதல் - அப்புறம் பாடல் என்று அவரின் பாத்திரம் முடிந்து விடுகிறது.

பாசம், அழுகை என நடிப்பில் முத்திரை பதித்துள்ளார் கீர்த்தி சுரேஷ். ரஜினியின் தங்கை என்றாலும் கதையின் நாயகி இவர்தான்.

மீனாவும், குஷ்புவும் நகைச்சுவை காட்சிகள் தவிர எதிலும் இல்லை என்பது ஏமாற்றமே. நகைச்சுவை காட்சிகளில் கைதட்ட வைத்துள்ளார் சூரி.

முதல்பாதியில் வில்லனாக வரும் பிரகாஷ்ராஜ் இரண்டாவது பாதியில் திருந்தி விடுகிறார். மற்ற இரு வில்லன்களான அபிமன்யு சிங், ஜெகபதி பாபு ஆகியோர் கொடுத்த பணியை செய்திருக்கிறார்கள்.

இமானின் இசையில் பாடல்கள் தாளம் போட வைக்கின்றன. பின்னணி இசையிலும் முத்திரை பதித்துள்ளார்.

முழுமையாக வர்த்தகத்தை மையப்படுத்திய - வழக்கமான ரஜினி வகை படம் என்றாலும் அனைவராலும் ரசிக்க முடியும்.



ஆடுகளம் படம் மூலம் அறிமுகமானவர் டாப்சி. ஆனால், தமிழில் அவருக்கு பெருமளவில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், ஹிந்தி, தெலுங்கு படங்களில் அவர் முன்னணி நாயகியாக உள்ளார்.

அண்மையில் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை அவர் ஆரம்பித்தார். அவுட்சைடர் பிலிம்ஸ் என்று பெயர் வைத்துள்ள அவர் முதன்முதலாக தயாரிக்கும் படத்தின் நாயகியாக சமந்தா நடிக்கவுள்ளார்.

பெண் மையக் கதாபாத்திரம் கொண்ட படமாக உருவாக உள்ள இந்தப் படத்தின் மூலம் சமந்தா பொலிவூட்டில் அறிமுகமாகவுள்ளார்.





வாடிவாசல்' படத்தில் சூரியாவுடன் இயக்குநர் அமீரும் நடிக்கிறார் என வெற்றிமாறன் வெளியிட்ட தகவல் பயங்கர பரபரப்பாகியிருக்கிறது. காரணம், 'பருத்தி வீரன்' படப் பிரச்னையில் சூர்யாவுக்கும் அமீருக்கும் கடுமையான மோதலானது.

அண்மையில், சூர்யா நடிக்கும் படத்துக்கு 'கண்ணபிரான்' என்ற தலைப்பு தேவைப்பட இயக்குநர் பாண்டிராஜ் அமீரை அணுகினார். ஆனாலும், அமீர் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார். இப்படி நீறுபூத்த நெருப்பாக சூர்யாவுக்கும் அமீருக்கும் பிரச்னைகள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், இருவரும் ஒரு படத்தில் இணைந்து நடிப்பது பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது.





நா.யோகேந்திரநாதன்

# ஒரே நாடு ஒரே சட்டத்தில் இலங்கையின் எதிர்காலம்!

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோஷம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினாலும் ஆளும் பொதுஜன பெரமுனவினாலும் தேர்தலின்போது மக்கள் முன் வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட கோட்பாடாகும்.

அவ்வகையில் அண்மையில் ஜனாதிபதியால் ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகையிலும் அதைத் திட்டமிடவும், ஆலோசனை வழங்கவுமென கலகொடை அத்த ஞானசார தேரரின் தலைமையில் ஒரு ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இது ஞானசார தேரர் தலைமையில் அமைக்கப்பட்டமை ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை அமுல்படுத்தவா அல்லது ஒரே இனம் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை அமுல்படுத்தவா என்ற கேள்வி பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

ஞானசார தேரருக்கெனத் தனியான ஒரு வரலாறு உண்டு. முஸ்லிம் பள்ளிவாசல்கள் மேல் தாக்குதல் தொடுத்து அவற்றைச் சேதப்படுத்துவதிலும் முஸ்லிம்களின் புனித நூலான திருக்குர் ஆனை வீதியில் தூக்கி எறிவதிலும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிதல், அவர்களின் பாங்கோசை ஒலி பெருக்கியில் ஒலிபரப்பப்படுவதையும் தடுப்பதிலும் தலைமை கொடுத்துச் செயல்பட்டவர் அவர். பேருவளை தர்கா நகர் பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம் இன அழிப்புக் கலவரங்களைத் தொடங்கி வைத்தவர். அம்பாறை, கண்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் இவரின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

அதேவேளையில் கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்குள் புகுந்து வன்முறைகளில் ஈடுபட்டமை மட்டுமின்றி, குருவானவரையும் தாக்கிக் காயப்படுத்தியிருந்தார். இவ்வாறே நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் குளத்துக்கு அருகாமையில் நீதிமன்றக் கட்டளையை மீறி அப்பகுதி விகாரையின் பீடாபதியின் உடலைத் தகனம் செய்தவர்.

ஏற்கனவே இவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் எனப் பௌத்தர்கள் அல்லாத ஏனைய மதங்கள் மேல் விரோதக் கொள்கை கொண்ட ஒருவர், நாட்டின் நீதித்துறையை மதிக்காத ஒருவர் ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் அவரின் சட்ட விரோத நடவடிக்கைகளை ஜனாதிபதியும், அரசாங்கமும் அங்கீகரிக்கின்றனர் என்பது அர்த்தமா என்ற கேள்வி எழுகிறது.

"ஒரே நாடு, ஒரே சட்டம்" என்பது இனங்களின் தனித்துவத்தையே கேள்விக்குள்ளாக்கும் என்றே கருதப்படுகிறது. இலங்கையில் முஸ்லிம் விவாகச் சட்டம், வடக்கில் தேச வழமைச்சட்டம் போன்றவை இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.



**முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் எனப் பௌத்தர்கள் அல்லாத ஏனைய மதங்கள் மேல் விரோதக் கொள்கை கொண்ட ஒருவர், நாட்டின் நீதித்துறையை மதிக்காத ஒருவர், 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் அவரின் சட்ட விரோத நடவடிக்கைகளை ஜனாதிபதியும், அரசாங்கமும் அங்கீகரிக்கின்றனர் என்பது அர்த்தமா என்ற கேள்வி எழுகிறது.**

அப்படியான நிலையிலும் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்பது இனவிரோத சிந்தனை கொண்ட ஒருவரின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மையானது நிச்சயமாக இலங்கையின் சிறுபான்மை இனங்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்யுமென நம்ப முடியாது.

தற்சமயம் தங்கள் உரிமைப் பிரச்னைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டம் 100 நாட்களைத் தாண்டியும் இன்னும் தீர்வு எட்டப்படவுமில்லை, எட்டப்படும் அறிகுறிகள் தென்படவுமில்லை. அதேவேளை மருத்துவ தாதியர் அமைப்புகள், ரயில்வே பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

அதேவேளை அரிசி, கோதுமை, பால்மா, சீனி உட்பட அத்தியாவசியத் தேவைப் பொருட்களின் விலையுயர்வு காரணமாகவும் எரிபொருள் விலையுயர்வு அச்சுறுத்தல் காரணமாகவும் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

அதேவேளையில் அண்மையில் உரையாற்றிய ஜனாதிபதி தான் அரிசி விலையையும், பருப்பு விலையையும் கவனிப்பதற்காக மக்களால் தெரிவு செய்யப்படவில்லையெனவும், எதிர்காலச் சந்ததிக்கு சுபீட்சமான நாட்டை உருவாக்குவதே நோக்கமெனவும் தெரிவித்துள்ளார்.

மீண்டும் இன, மத, ஒடுக்குமுறைகளை முன்னெடுக்க ஒரு செயலணி அமைப்பதாலோ, அரச பணியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமலோ, மக்களை பட்டினி போடுவதாலோ எதிர்காலத்தில் ஒரு சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமா என யாரும் அவரிடம் கேட்கவுமில்லை! அவரும் அது பற்றி விளக்கம் எதுவும் கொடுக்கவுமில்லை.

அதேவேளையில் கொழும்பு பொருளாதார மத்திய நிலையத்தின் பிரதான வர்த்தகர் ஒருவர் தற்சமயம் மரக்கறிகளின் வரத்து அரைவாசிக்கு மேல் குறைவடைந்து விட்டதாகவும் அவற்றின் தரமும் தரமிழந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகளும் வெகுவாக அதிகரிக்கும் வாய்ப்புகள் உண்டு.

இந்த நிலையில் விவசாயிகள் தங்களுக்கு இரசாயனப் பசளைகளை வழங்கும் படி கோரி நாடு பரந்தளவில் போராட்டங்களை நடத்திய வருகின்றனர். காலம் காலமாக இரசாயனப் பசளைகளுக்கு இசைவாக்கம் பெற்றுவிட்ட விளை நிலங்கள், விதைகைள் என்பன சேதனப் பசளைகளுக்கு உரிய விளைச்சலை வழங்கப் போவதில்லை. எனவே நெல்லு, மரக்கறி என்பனவற்றின் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்படும். எனவே அரிசி உட்பட உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிலை தவிர்க்க முடியாது.

ஆனால், விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம இரசாயனப் பசளையை இறக்குமதி செய்யப் போவதில்லையெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையும் இரசாயன உரமின்மையால் பெரும் உற்பத்தி வீழ்ச்சியை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாடு வெகுவிரைவில் பெரும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவலம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன அரிசி இறக்குமதி பற்றிப் பேச ஆரம்பித்துள்ளார்.

ஆனால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கவுள்ளது பற்றி எவரும் கவலைப்படவோ மாற்று ஏற்பாடுகள் பற்றிய முயற்சிகளை மேற்கொள்ளவோ முயற்சிகள் எடுப்பதாகத் தெரியவில்லை.

எப்படியிருந்த போதிலும் உற்பத்தி வீழ்ச்சி, கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வு, அரச பணியாளர்களின் போராட்டங்கள், அந்நியச் செலாவணி தட்டுப்பாடு எனப் பலவித நெருக்கடிகளையும் கடும் எதிர்ப்புகளையும் அரசாங்கம் சந்தித்து வருகிறது.

இப்படியான ஒரு நிலையில்தான் ஒரு நாடு - ஒரே சட்டம் செயலணி உருவாக்கமும் அதற்கு இன, மத வெறி கொண்ட ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டதும் இடம் பெற்றுள்ளன.

இது தற்சமயம் நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்பி மீண்டும் இனவாதச் சேற்றுக்குள் அமுக்கி இன மோதல்களை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதா இந்த நியமனம் எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

நாடு நெருக்கடிகளைச் சந்திக்கும் போதெல்லாம் சிறுபான்மை மக்களைப் பகடைக் காய்களாக்கி இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இலங்கை அரசியலில் அப்படி ஒன்றும் புதிய விடயமல்ல.

சிங்கள மக்கள் மீண்டும் இத்தகைய ஏமாற்றுகளின் பின்னால் இழுபட்டுப் போகாமல், தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க வழி தேடுவார்களா இல்லையா அல்லது தொடர்ந்தும் இனவாதத்தின் பின்னால் இழுபட்டு நாட்டைப் படுகுழியில் தள்ளப்போகிறார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


நன்றி - அருவி

# அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் விழா 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பம்

அவுஸ்திரேலிய இலக்கிய கலைச் சங்கத்தின் வருடாந்த எழுத்தாளர் விழா இம்மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியா நேரம் இரவு 7-00 மணிக்கு சங்கத்தின் தலைவர் மருத்துவர் வஜ்னா ரஃபீக் தலைமையில் மெய்நிகரில் ஆரம்பமாகிறது.

முதல் நாள் நிகழ்ச்சி வாசிப்பு அனுபவப் பகிர்வாகவும், இரண்டாம் நாள் நிகழ்ச்சி பன்னாட்டு கவியரங்காகவும், மூன்றாம் நாள் நிகழ்ச்சி விசேட இலக்கிய உரையரங்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


கருணாகரன்


எஸ்.ராமகிருஷ்ணன்


ஜின்னா செரிபுத்தீன்

அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் சிலரது அண்மைக்கால வெளியீடுகள் முதல் நாள் நடைபெறும் வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சங்கத்தின் தலைவர் மருத்துவர் ( திருமதி ) வஜ்னா ரஃபீக்கின் தொடக்கவுரையையடுத்து எழுத்தாளர் முருகபூபதியின் தலைமையில் வாசிப்பு அனுபவப் பகிர்வுரையரங்கம் நடைபெறும்.

நூலின் பெயர் - ஆசிரியர் - உரையாற்றுபவர் விபரம் பின்வருமாறு:

நெடு மரங்களாய் வாழ்தல் - ஆழியாள் மதுபாஷினி. உரை: திருமதி ஜெ. ஹறோசனா

சமாதானத்தின் கதை - ஜேகே. - உரை: பாத்திமா மாஜீதா

கண்டிச்சீமை - மாத்தளை சோமு - உரை: திருமதி சாந்தி சிவகுமார்

அமீலா - தெய்வீகன் - உரை: மருத்துவர் எம். நளீமுடீன்

கானல் தேசம் - நொயல் நடேசன் - உரை: பார்த்தீபன்

கள்ளக்கணக்கு பேராசிரியர் ஆசி. கந்தராஜா உரை: திருமதி ரஞ்ஜனி சுப்ரமணியம்

நினைவழியா நாட்கள் -ஜெயராம சர்மா - உரை: கலாநிதி ஸ்ரீகௌரி சங்கர்

சத்தியம் மீறியபோது வி.எஸ். கணநாதன்

உரை: டொக்டர் நொயல் நடேசன்

உயிர் வாசம் - தாமரைச்செல்வி - உரை: கானா. பிரபா

வாசிப்பு அனுபவ உரைகளையடுத்து இலங்கை கிளிநொச்சியிலிருந்து படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான கருணாகரன் “புலம்பெயர் இலக்கியத்தின் எதிர்காலம்” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி - பன்னாட்டுக்கவியரங்கம்

இரண்டாம் நாள் 13 ஆம் திகதி சனிக்கிழமை அவுஸ்திரேலியா நேரம் இரவு 7-00 மணிக்கு எழுத்தாளர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா தலைமையில் “புதியதோர் உலகை நோக்கி....!” என்னும் தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கவியரங்கில் இலங்கை, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த கவிஞர்கள் பங்குபற்றுவர்.

சங்கத்தின் துணைத்தலைவர் சங்கர சுப்பிரமணியனின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் இக்கவியரங்கில் இலங்கையிலிருந்து கவிஞர்கள் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன், ஏ. பீர் முகம்மது, வேலாயுதம் தினகரன், வெல்லவூர்க் கோபால், இங்கிலாந்திலிருந்து கோவிலூர் செல்வராஜன், ஜெர்மனியிலிருந்து அம்பலவன் புவனேந்திரன், டென்மார்க்கிலிருந்து முல்லை நாச்சியார், அவுஸ்திரேலியாவிலிருந்து இளமுருகனார் பாரதி, கல்லோடைக்கரன் ஆகியோர் பங்கேற்பர்.

இதனையடுத்து காப்பியக்கோ ஜின்னா செரிபுத்தீன் சிறப்புரையாற்றுவார்.

மூன்றாம் நாள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியா நேரம் இரவு 7-00 மணிக்கு எழுத்தாளர் நொயல் நடேசன் தலைமையில், சங்கத்தின் துணைத்தலைவர் ந.சுந்தரேசனின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் சிறப்புரையரங்கில் தமிழக பிரபல எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், நினைவும் நிஜமும் என்னும் தொனிப்பொருளில் இலக்கியத்தின் ஆதாரமும் சமகால நிகழ்வுகளும் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.


இவ்விழாவின் முதல்நாள், மற்றும் இறுதிநாள் நிகழ்ச்சிகளின் பின்னர், சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் இசைக் கலைஞருமான அருண் குமாரசாமியின் சப்தஸ்வரங்கள் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெறும்.

இறுதிநாளன்று, நிகழ்ச்சிகளின் நிறைவையடுத்து சங்கத்தின் செயலாளர் கலாநிதி ஸ்ரீகௌரி சங்கர் நன்றியுரை நிகழ்த்துவார்.

மெய்நிகர் இணைப்பு:

Meeting ID: 819 2821 5942
Passcode: 445435

# கலாசார பண்பாட்டு திணைக்களத்துக்கு பெருமை சேர்த்த நூல் வெளியீட்டு விழா






**உலகானந்தன்**

பல வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இறுவெட்டு வெளியீட்டு விழா ஒன்றில் நான் கலந்துகொண்டேன். இசையோடு கூடிய தேவார திருவாசகத்தின் தொகுப்பு அங்கே வெளியிடப்பட்டது.

சமயகுரவர்களைப் போல பாடல்களை இயற்றியவர்கள் பலர் இன்று எம்மிடையே இருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் பாடிய அவர்கள் பாடல்களைக் கோயில்களில் பாடுவதைப்போல இவர்கள் பாடியதை ஏன் நாம் பாடுவதில்லை. ஏன் அவர்கள் போல இவர்களைக் கொண்டாடுவதில்லை. என்று அந்த நிகழ்வின் பேச்சாளரைப் பார்த்துக் கேட்டேன்.

அதற்கு அவர் “அன்றைய அந்தப் படைப்புகள் அத்தனையும் திரு உடல்களுக் கூடாக வெளிப்பட்டவை. அவை தவமிருந்த அடியார்களால் எழுதப்பட்டவை. இறையோடு ஒன்றித்துப் பயணித்த “திரு” வாளர்களால் படைக்கப்பட்டவை. எனவேதான் அவற்றிற்கு அத்தனை சக்தி உண்டு. அவற்றைத் திரும்பத் திரும்பப் படிக்கும் தோறும் அவை எம்மை மேம்படுத்துகிறது.எனவேதான் அவற்றை நாம் போற்றிக் கொண்டாடுகிறோம்” எனச் சுருக்கமாகப் பதில் அளித்தார்.

அது போலத்தான் ஒருவரின் எழுத்துகளும். அவ் எழுத்துகளால் நாம் ஈர்க்கப்பட வேண்டுமாயின் அதற்குரியவர்களால் அவை எழுதப்படல் வேண்டும்.பலர் எழுதுகிறார்கள். ஆனால் ஒரு சிலரால் தான் அவ் எழுத்துகளுக்கு வலுவூட்ட முடிகிறது. பெருமை சேர்க்க முடிகிறது.

அப்படி எழுத்துக்கு வலுவூட்டிய ஒரு பழம் பெரும் எழுத்தாளர் சாந்தனின் ஆக்கங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து “சாந்தன் படைப்புலகம்” என்ற ஒரு தொகுப்பை வட மாகாண கல்வி கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. கடந்த 01.11.2021 திங்கள் அன்று மாலை 3 மணியளவில் கல்வி அமைச்சின் மண்டபத்தில் அதன் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இலக்கிய ஆர்வலர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் புடை சூழ நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவிலே நூலின் முதற் பிரதியை எழுத்தாளர் சாந்தன் மற்றும் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் வழங்க பேராசிரியர் சண்முகதாஸ் பெற்றுக் கொண்டார்.

1960 களில் எழுதத் தொடங்கிய சாந்தனின் எழுதுகோல் இன்னும் ஓயாது எழுதிக்கொண்டே இருக்கிறது என்பதுக்குச் சாட்சியாக அந்நூல் காணப்படுகிறது. அன்று தொட்டு அவர் எழுதிய எழுத்துகளில் பெரும்பாலானவற்றை ஒன்று திரட்டிப் பதிப்பிக்கப்பட்ட அந்நூலில், காலந்தோறும் அவர் பற்றியும் அவர் படைப்புகள் பற்றியும் பிறர் எழுதியவைகளும் இணைக்கப்பட்டுள்ளமை சிறப்பைத் தருகிறது.


எழுத்தாளர் சாந்தன் கலைஞாயிறு, யாழ்முத்து,, வட மாகாண முதலமைச்சர் விருது, சாகித்திய ரத்தினா, சாகித்திய மண்டலம், இந்திய சாகித்ய அகடமியின் “பிரேம்சந்” விருது, உட்படப் பல சர்வதேச விருதுகளுக்குச் சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடபுலத்துப் பண்பாட்டு அம்சங்களைப் பேணிக்காத்தல், பயில் நிலையில் வைத்திருத்தல், ஆவணப்படுத்துதல் அவற்றினை எதிர்காலச் சந்ததியினருக்குக் கடத்துதல் எனப் பல தளங்களினூடாகத் தமது நடவடிக்கைகளை எடுத்துவரும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் அனைத்தும் பாராட்டுக்குரியவை.அதுவும் சாந்தன் படைப்புலகம் என்ற இந்த நூலை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற வகையில் அதற்கென அயராது உழைத்திருக்கும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி.சுஜீவா சிவதாஸ் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.தக்சாயினி செல்வகுமார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். ■

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம் பால்
விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்திப்,
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறு கோல்
‘உண்’ என்று ஓக்குபு புடைப்ப தெண் நீர்
முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,
அரி நரைக் கூந்தல் செம் முது செவிலியர்
பரி மெலிந்து ஒழிய பந்தர் ஓடி,
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்,
கொண்ட கொழுநன் குடி வறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே?
(நற்றிணை - பாடல் 110 போதனார்)

# யாதுமாகி நின்றவள்..!

**குரு அரவிந்தன்**



‘அண்ணி வந்து சாப்பிடுங்களேன்..!’

‘இல்லை நிலா எனக்குப் பசிக்கலை..!’

‘இரண்டு நாளாய் நானும் பார்க்கிறேன், மதியம் ஒரு சாப்பாட்டோட நீங்க இருக்கிறீங்க ஏன் அண்ணி?’

‘எங்க ஊர்க் கோயில் உற்சவம் நடக்குது அதுதான் விரதம் இருக்கிறேன்..!’ என்றாள் சுபா.

‘சரி, காலையில சாப்பிடாட்டி விரதம் என்று எடுத்துக்கலாம் அதுக்காக நீங்க இரவிலும் சாப்பிடாமல் இருக்கணுமா?’

சுபா சிரித்துச் சமாளிக்கப் பார்த்தாள்.

‘டயற்றிங் என்று சொல்லப் போறீங்களா..? அளவாய், அழகாயிருக்கிறீங்க, என்னுடைய கண்ணே பட்டிடும் போல இருக்கு, இதைவிட மெலிஞ்சால் வடிவாயிருக்காது அண்ணி, ஏன் சாப்பிர்றதில்லை?’

சுபா எதுவும் சொல்லாது மௌனமானாள்.

‘அண்ணா ஏதாவது சொன்னானா, சொல்லுங்கண்ணி..?’

சுபா சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டுக் கேட்டாள்,

‘உங்கண்ணா சாப்பிடாமல் பட்டினி இருப்பாரா?’

‘அவரா, பசிதாங்கவே மாட்டார்..! ஒரு நேரம் சாப்பாடு தாமதமானாலே கொதிச்சுப் போயிடுவாரே’

‘உங்கம்மா இந்த வயசில பட்டினி கிடக்கலாமா, இல்லைத்தானே..! நானென்ன காலமெல்லாம் பட்டினி கிடக்கவா போறேன். இந்த கொரோனா வைரஸ் பிரச்சனை தீர்ந்ததும் எல்லாம் சாதாரண நிலைக்கு வந்திடும், அப்புறம் விரும்பின மாதிரி, விரும்பிய சாப்பாட்டைச் சாப்பிடலாம் தானே?’

கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி எல்லோரையும் முடக்கி, உலகத்தையே கட்டிப் போட்டு வைத்திருந்தது. பலசரக்குக்கடைகள், உணவகங்கள் எல்லாம் அவசரநிலை காரணமாக மூடப்பட்டுக் கிடந்தன. கண்ணுக்குத் தெரியாத இந்த ஆட்கொல்லி வைரஸ் எப்படி எங்கே பரவும், இதைத் தடுப்பதற்கான மருந்து என்ன என்று ஒன்றுமே தெரியாத ஒரு நிலையில் எல்லோரும் பயத்துடனே காலத்தைக் கழித்தார்கள். நோய் மேற்கொண்டு பரவுவதைத் தடுக்க அரசு எல்லோரையும் வீட்டுக்குள்ளே முடக்கி வைத்திருந்தது. போக்குவரத்தும் முடக்கப்பட்டதால், உணவு பற்றக்குறை ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலித்தது. நகரத்தில் இருந்தவர்களுக்குப் பணம் இருந்தாலும் வாங்க முடியாத நிலை, எனவே வீட்டிலே இருந்த உணவு வகைகளை வைத்துத்தான் சமாளிக்க வேண்டி வந்தது.

நிலா சற்று நேரம் யோசித்தாள். உணவு தட்டுப்பாடு இருப்பது அவளுக்கும் தெரியும், ஆனால் வீட்டில் இருப்பது எவ்வளவு காலத்திற்குப் போதும் என்பது பற்றி அவள் யோசித்துப் பார்க்கவில்லை. இருப்பதை வைத்துத்தானே சமாளிக்க வேண்டும்.

‘நீங்க சொல்றது சரி தான், எங்க வீட் டில இருக்கிறது எவ்வளவு நாட்களுக்குப் போதுமோ எனக்குத் தெரியாது, அவங்க இரண்டு பேரையும் விடுங்கண்ணி, ஆனால் நானும் சாப்பிடாமல் இருக்கலாம்மல்லவா..?’

‘இல்லை நிலா, உனக்குக் கலியாணம் பேசுறாங்க, எந்த நேரமும் அது முற்றா கலாம். பெண் பார்க்க வரும்போது காய்ந்து வாடிய முகத்தோடு இருந்தால் நல்லாவா இருக்கும். இந்த இளமைப் பருவத்தில எந்தக் குறையும் இல்லாமல் நீங்க வளரணும்’

‘அதுக்காக நீங்க பட்டினி கிடக்க ணுமா அண்ணி, எந்தப் பெரிய பணக் காரக் குடும்பத்தில எவ்வளவு வசதியா, செல்லப் பெண்ணாய் இருந்து வந்தீங்க, அண்ணாவையே கட்டிப்பேன் என்று விரும்பினதாலேதானே கட்டீட்டு அண்ணாவோட இங்க டவுணுக்கு வந்தீங்க. இப்ப எங்ககூட இருந்து, உங் களை வருத்தி இப்படிக் கஸ்டப்படுறீங்களே’

‘இல்லையம்மா, யாரும் என்னைக் கட்டாயப் படுத்தல்லையே, எனக்குப் பிடிச்சபடியால் நானாகத்தானே உங்கண் ணாவை விரும்பிக் கட்டிக்கிட்டேன், எனக்குப் பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒண்ணுதான்!’

‘ஆனால் உங்க வசதிக்கு ஏற்றமாதிரி ஒண்ணும் இங்கே கிடைக்கலையே..!’

‘ஏன் கிடைக்கலை, குழந்தை மருத்துவரான அன்பான கணவன், ஆதரவான மாமி, சாப்பிட்டீங்களான்னு பாசத்தோட வந்து விசாரிக்கும் மச்சினி இதைவிட எனக்கு என்ன வேணும்..!’என்றாள் சுபா.

இதைக் கேட்ட நிலா உடைந்து போய், கண்கள் கலங்க அவளது தோளிலே தலை வைத்து விம்மினாள்.

‘எனக்கு இப்படி ஒரு அக்கா இல்லையேன்னு நான் ஏங்கியிருக்கிறேன். அண்ணி வடிவத்தில எல்லாமே நீங்களாய் இருக்கிறீங்களே, எப்படி அண்ணி உங்களாலே முடியுது?’

‘சின்ன வயதில அம்மாவும், பாட்டியும் சாப்பாடு ஊட்டி விடும் போதெல்லாம் வேண்டாம் என்று சொல்லி ஓடி ஒளிச்சிருக்கிறேன். உணவின் அருமை அப்போது எனக்குப் புரியவில்லை அதன் பின்னும் வீட்டிலே வசதிகள் இருந்ததால், நான் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. உணவு, உடை, அமைதியாய்ப் படுத்துத் தூங்குவதற்கு ஒரு இடம் இதெல்லாம் ஒருவருக்கு எவ்வளவு முக்கியம் என்பதை வளர்ந்த பிறகுதான் புரிந்து கொண்டேன். ஆண்டவன் எல்லா வசதிகளையும் எமக்குத் தந்திருக்கிறான் நிலா, கிடைத்ததே போதும் என்று அதை நாங்கள் திருப்தியோடு ஏற்றுக் கொள்ளப் பழகிக்கொள்ளணும். நாங்க எந்த நோய் நொடியும் இல்லாமல் பாதுகாப்பாய் வீட்டுக்குள்ளே இருக்கிறோமல்லவா, இதைத்தான் ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்று சொல்லுவாங்க.’

‘எனக்கொரு அண்ணி வந்தால் என்னோடு முரண்படுவாளோன்னு நான் சில சமயங்களில நினைச்சிருக்கிறேன், ஆனால் இப்படி ஒரு அன்பான, பாசமான அண்ணி கிடைச்சது நான் செய்த பாக்கியம்தான்.’ என்றாள் நிலா.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, சுபாவின் செல்போன் அடித்தது, எடுத்துப் பார்த்தாள். ஊரிலிருந்து அப்பா..!

‘என்னப்பா எப்படி இருக்கிறீங்க, சொல்லுங்கப்பா.. அம்மா எப்படி இருக்கிறா..?’

‘நாங்க நல்லாயிருக்கிறோம். உன்னை நினைச்சுத்தான் அம்மா கவலைப்பட்டிட்டிருக்கிறா. டவுண்ல கடைகள், சுப்பமாக்கெட் எல்லாம் மூடிட்டாங்களாமே, ஒரு பொருளும் வாங்கமுடியாதாமே, சாப்பாட்டுக்கு என்னம்மா செய்யிறீங்க, அரிசி, மா, பருப்புன்னு கொஞ்சம் நம்ம வண்டியில அனுப்பி விடவாம்மா?’

‘வேணாமப்பா, எல்லாமே இருக்கப்பா, அவர் எல்லாமே வாங்கிக் கொண்டு வந்து வெச்சிருக்கிறாரப்பா, எங்களுக்கு இன்னுமொரு மாதத்திற்குப் போதுமப்பா’

அருகே நின்ற நிலா சட்டென்று செல்போனைப் பறித்து ‘அங்கிள் அண்ணி சாப்பிடாமல் பட்டினி இருக்கிறாங்க’ என்று சொல்ல, சுபா செல்போனை அவளிடம் இருந்து பறித்துப் பேசினாள்.

‘என்னம்மா நிலா சொல்றா, சாப்பிடாம இருக்கிறியாமே..?’

‘அது ஒன்றுமில்லையப்பா நம்ம கோயில் உற்சவம் நடக்குதுதானே, அதுதான் விரதம் இருக்கிறேன், இவங்க விட்டாத்தானே, பட்டினி கிடக்காதை சாப்பிடுன்னு கட்டாயப் படுத்திறாங்கப்பா..!’

‘இந்தாம்மா அம்மா பேசணுமாம், அம்மாவோட பேசு..!’

‘அம்மா எப்படியம்மா இருக்கே..?’

‘இருக்கேன், உன்னை நினைச்சாத்தான் எனக்குப் பெருமையாய் இருக்குடி, எப்படி இதையெல்லாம் சமாளிச்சிட்டிருக்கிறாய்?’

‘என்னம்மா, ஒரு நேரம் சாப்பிடாமல் விரதம் இருந்ததற்கு இவ்வளவு ஆரவாரமா?’

‘மூத்தபிள்ளை ஆணாகப் பிறக்கலையேன்னு அப்பாவுக்கு வருத்தம் இருந்திச்சு, ஆனால் உன்னைப் பெற்றெடுத்ததற்காக உண்மையிலே நாங்க பெருமைப் படுறோமடி’ தாயார் விசும்பும் ஓசை காதில் விழுந்தது.

‘என்னம்மா, சின்னப்பசங்கமாதிரி நீங்களும் அழுகிறீங்களா, எல்லாமே உங்க கிட்ட கற்றுக் கொண்டதுதானே, உன்னைப் போலவே இவங்களும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# யாதுமாகி நின்றவள்..!

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரொம்ப பாசமாய் இருக்கிறாங்கம்மா, நான் எப்படியும் சமாளிச்சிடுவேன், பயப்படாதீங்க, அப்பாவைப் கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கம்மா' என்று சொல்லி விடைபெற்றாள்.

'அவங்கதான் அரிசி, பருப்பு எல் லாமே கொடுத்தனுப்பிறதாய் சொன் னாங்களே ஏன் வேணாம் என்று சொன்னீங்கண்ணி?' என்றாள் நிலா.

'உங்கண்ணா சீர்செனம் என்று கேட்டு எப்பவுமே அவங்ககிட்டக் கடமைப்படல்லை, இப்ப ஒரு நேரச்சாப் பாட்டிற்காக அவர் கடமைப்பட வேணுமா நிலா?, அவருடைய நல்ல மனசு எப்பவுமே நோகக்கூடாது என்றுதான் இப்படிச் செய்தேன். நான் அப்படிச் சொன்னது தப்பா சொல்லு..! கொஞ்ச நாளில நிலைமை வழமைபோல வந்து, எல்லாம் சரியாயிடும்' என்றாள் சுபா.

'இப்டியும் ஒரு அண்ணி கிடைப்பாளா, உண்மையிலே அண்ணாவைவிட, நான்தான் அதிஸ்டம் செய்திருக்கிறேன்.' என்று நிலா ஆச்சரியப்பட்டாள்.

இரண்டு மாதங்கள் மெதுவாக நகர்ந்தன. கொரோனா வைரஸ் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு, நாடு பழைய நிலைக்கு மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருந்தது. ஆனாலும் அதன் தாக்கம் எங்கும் பிரதிபலித்தது. இப்படி ஒரு நிலைமையை மீண்டும் எதிர்கொள்ள இயலாது என்ற நிலையில் மக்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

என்னதான் கொரோனா வைரஸ் ஒருபக்கம் பரவிக் கொண்டிருந்தாலும், இயற்கையின் நியதிகள், அதாவது மகப்பேறுகள் ஒரு பக்கம் நடந்து கொண்டுதான் இருந்தன. அருகே இருந்த தனியார் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக் கடமையாற்றும் கணவன் வந்ததும் சிரித்த முகத்தோடு வரவேற்றாள் சுபா. அன்று கொஞ்சம் கஸ்டமான சிசேறியன் பிரசவம் என்பதால் ஆயுதம் பாவிக்க வேண்டிவந்தது என்றும் ஆனாலும் பிரசவம் சுகமாக நடந்தது என்றும், தாமதமாக வந்ததற்குக் காரணம் சொன்னான் டாக்டர் ரமேஷ்..

'இப்பவே இப்படிக் களைச்சுப் போனீங்கன்னா, இன்னும் கொஞ்ச மாதத்தால என்ன செய்யப்போறீங்களோ தெரியலை' என்றாள் சுபா.

'ஏன் கொஞ்சமாதத்தால என்ன..?' என்றான் ரமேஷ்.

'எங்களைப் போலவே நிறை ஜோடிங்க இந்த கொரோனா வைரஸாலே வீட்டுக்குள்ளே பொழுது போகாமல் அடைஞ்சு கிடந்திருக்கிறாங்க. இயற்கையின் நியதி என்று ஒன்று இருக்கிறதல்லவா, அதனாலே பார்த்திட்டிருங்க, உங்க நார்சிங்ஹோமுக்கு இன்னும் ஒன்பது மாசத்தில நிறைய பேஷன்ட் வரப்போறாங்க, கொஞ்சம் எக்ஸ்ராபெட் போட்டு வைங்க, தேவைப்படலாம்' என்றாள் சுபா

புரிந்தும், புரியாதது போல கேள்விக் குறியோடு ஆச்சரியமாக அவளைப் பார்த்தான் ரமேஷ். வெட்கப்பட்டுக் தலைகுனிந்த சுபாவின் முகத்தில் தெரிந்த தாய்மையின் பூரிப்பு அவனது விடைதெரியாக கேள்விக்குப் பதில் சொன்னது. மார்பிலே சாய்ந்த அவளை அன்போடு அணைத்து, ஆதரவாகத் தலையை வருடிவிட்டான் அப்பாவாகப் போகும் டாக்டர் ரமேஷ்.

ரமேஷ் சாப்பிட உட்கார்ந்தான். சுபா நிலாவையும் கூப்பிட்டு இருத்திப் பரிமாறினாள்.

'நீயும் உட்கார்ந்து சாப்பிடு சுபா..!' என்றான் ரமேஷ்

'எனக்குப்பசிக்கலை, நீங்கசாப்பிடுங்க..!' என்றாள் சுபா

'நிலா என்கிட்ட எல்லாம் சொல்லிட்டாள், இங்கேபார் இப்ப உணவு தட்டுப்பாடு ஒன்றுமில்லை, உனக்காக இல்லாவிட்டாலும் நம்ம குழந்தைக்காகவாவது நீ சாப்பிடணும்' என்றவன் அருகே நின்ற அவளுக்கும் எட்டி ஊட்டிவிட்டான்.

இதற்காகவே, கணவனின் இந்த அன்புக்காகக் காத்திருந்ததுபோல அவள் ஆசையோடு குனிந்து அதை வெட்கப்பட்டு ஏற்றுக் கொண்டாள்.

ஒன்றுமே புரியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நிலாவுக்குச் சட்டென்று பொறி தட்டியது. 'நான் அத்தையாகப் போகிறேனா?' என்ற மகிழ்ச்சியைத் தாங்கமுடியாமல் மெதுவாக எழுந்து அந்த இடத்தைவிட்டு நழுவினாள்.

'ஒரு குடும்பப் பெண்ணால் என்னென்ன பாத்திரங்கள் ஏற்க முடியுமோ அதை எல்லாம் முகம் கோணாது, யாருடைய மனமும் நோகாது, சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொண்டு நடக்கும் எத்தனையோ அண்ணிமார்களில் எனக்குமொரு அண்ணி கிடைத்ததற்கு உண்மையிலே நான் பெருமைப்படுகின்றேன்' என்ற மகிழ்ச்சியோடு தாயாரிடம் ஓடிப்போனவள், 'அம்மா, ஒரு நல்ல செய்தி, நீங்க பாட்டியாகப் போறீங்க..!' என்று அந்த நல்ல செய்தியை மகிழ்வோடு தாயாரிடம் தெரிவித்துவிட்டு அவளின் முகத்தைப் பார்த்தாள் நிலா.

'நானா, உண்மையாவா..?'அன்றலர்ந்த தாமரைபோல் மலர்ந்து விரிந்த தாயின் முகம், வரப்போகும் அடுத்த வாரிசை நினைத்துக் கற்பனையில் மிதக்கத் தொடங்கியது!

மேசையில் இருந்த பிரேமில் இருந்த குடும்பப்படத்தில் குட்டி ரமேஷின் சிரிப்பு கண்ணுக்குள் நின்றது. ■



# கந்தஷஷ்டி விரதமும் கலங்கும் பக்தர்களும்

**சதா. இராதாகிருஷ்ணக் குருக்கள்**

கந்தசஷ்டி விரதம் காலா காலமாக அநேக பக்தர்களால் மிகவும் பக்திபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டித்து வருகின்ற ஒரு புனிதமான விரதமாகும். கந்தஷஷ்டியை கருத்தில் கொண்டு அதற்கு முன்வரும் ஐந்து நாள்களிலும் ஒரு நேரம் மட்டும் உணவு எடுப்பவர்கள், உணவே எடுக்காமல் ஒருநேரம் மட்டும் பாலோ, பழமோ எடுப்பவர்கள், இன்னும் கோயிலில் வழங்கப்படும் பானத்தையோ, தீர்த்தத்தையோ ஒரு நேரம் மட்டும் அருந்தி விரதமிருப்பவர்கள், ஆறுநாளும் எதுவுமே சாப்பிடாமல் உபவாசமிருப்பவர்கள் என்று எல்லா விரதமனுஷ்டிக்கும் பக்தர்கள் அனைவரும் ஷஷ்டி முடித்து அடுத்தநாள் காலை அதாவது சூரன்போர் முடித்து அடுத்தநாள் காலை விரதத்தைப் பூர்த்தி செய்து பாறணை பண்ணுவது வழமை. ஆனால் இம்முறை பக்தர்களின் மனதை புண்படுத்துவது போலவும் அவர்களுடைய விரதத்தை கருத்திற்கொள்ளாமலும் சில ஆலயங்கள் கந்தஷஷ்டி 05ஆம் நாளாகிய 09.11. 2021 செவ்வாய்க்கிழமை சூரன்போர் நடத்த முன்வந்துள்ளதால் விரதத்தின் தன்மை என்னாவது என்று கலங்கி நிற்கும் பக்தர்களுக்கு இறைவன்தான் ஆறுதல் கூறவேண்டும்.

கந்தஷஷ்டி விரதத்தை தேவர்கள் அனுஷ்டித்து முருகப் பெருமானால் அசுரர்களின் ஆணவம், அகங்காரம், அழிக்கப்பட்டது. எனவே இந்த விரதத்தின் பிரதான நோக்கமான ஆணவ, அகங்காரங்களை அழித்து ஏற்கனவே மாறாத துன்பத்திலும், துயரத்திலும் துவண்டுபோய் இறைவனே கதி என்று நம்பி வரும் பாமர மக்களை அவதியடையச் செய்யாதீர்கள், பூசைகள், விரதங்கள் எல்லாம் ஒவ்வொருவரின் இஷ்டப்படி செய்வதாக இருந்தால் இவற்றால் நன்மை வருவதற்குப் பதிலாக தீமைகளே பெருகும்.

ஓர் ஆலயம் கும்பாபிஷேகம், உற்சவம் முதலியவற்றை ஒருபஞ்சாக்கத்தின்படி கைக்கொண்டு வந்தால் அந்தப் பஞ்சாக்கத்தில் விரதமுறை எப்படிப் குறிப்பிட்டுள்ளதோ அதையே கைக்கொள்ள வேண்டும். அதைவிட்டுவிட்டு மக்களுக்கு திதி பார்க்க ஒரு பஞ்சாங்கம், தம்முடைய பிற வேலைகளுக்கு பங்கம் வராமல் அடுத்தவர்களுக்கு திருமணநாள், கிரகப்பிரவேச நாள் பார்ப்பதற்கு ஒரு பஞ்சாங்கம் என்று ஒரு நியதி இல்லாமல் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்புவதை தயவுசெய்து நிறுத்துங்கள்.

ஒவ்வொரு வருடமும் வருட ஆரம்பத்திலேயே பஞ்சாங்கங்கள் வந்துவிடும். ஆனால் நவராத்தி விரதம், கந்தஷஷ்டி விரதம் தொடங்குவதற்கு முதல்நாள்தான் அந்த விரதநாள்களில் உள்ள குறைபாடுகள் பற்றி பத்திரிகைகளில் யாராவது இரு சாரார் விவாதித்துவிட்டு சில ஆலயங்கள் ஒரு நாளும் வேறு சில ஆலயங்கள் இன்னொரு நாளும் எந்தவொரு முன்னறிவித்தலின்றி தொடங்கி விடுவார்கள்.

ஆலயத் திருப்பணிக்கும், தொண்டுகளுக்கும், வருமானத்துக்கும் தேவைப்படும் பாமரமக்களுக்கு, விரதங்களை அனுஸ்டிக்கும் மக்களுக்கு முன்கூட்டியே தெளிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றுவதில்லை.

மக்களை அறநெறியில் வழிப்படுத்த வேண்டியது ஆலயங்களினதும் குருமார்களினதும் ஆலய பரிபாலன சபைகளினதும் தலையாய கடமையாகும். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கடமையைச் செய்யுங்கள் ஆலயங்களுக்கு என்று இருக்கும் மரபு வழி முறைகளை நினைத்தபடி மாற்றாதீர்கள். பிழையான ஒரு காரியத்தைச் செய்து புண்ணியத்துக்குப் பதிலாக பாவத்தை தேடாதீர்கள். நியதியோடு இருக்கும் விரத்தைக் குழப்பி விரதம் இருக்கின்ற அடியார்களின் மனதைக் கலங்கவிடாதீர்கள். கொள்கையோடு இருங்கள், நன்மையே செய்யுங்கள். ■




# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

33. ஆறு இடங்கள் தொடர்புபடும் பாதையின் வரைபடம் தரப்பட்டுள்ளது. அம்புக்குறியால் காட்டப்படுவது பயணம் செய்யக் கூடிய திசைகள் ஆகும்.




ஒருவர் பேருந்து நிலையத்திலிருந்து அலுவலகம் வரை செல்வதற்கு ஒன்றுக்கொன்று வேறுபட்ட எத்தனை பாதைகள் உள்ளன?


(1) 7 (2) 8 (3) 9

34. ஒவ்வொரு பூவிலும் ஒரு வண்ணத்துப்பூச்சி இருந்தால் ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு பூ கிடைக்க மாட்டாது. அதே நேரம் ஒரு பூவில் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் இருந்தால் ஒரு பூ எஞ்சியிருக்கும் எனின் அங்குள்ள பூக்களினதும் பூச்சிகளினதும் எண்ணிக்கை யாது?

(1) பூக்கள் - 6 வண்ணத்துப்பூச்சிகள் - 8

(2) பூக்கள் - 5 வண்ணத்துப்பூச்சிகள் - 10


(3) பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4

35. 


தரப்பட்ட உருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கைகள் முறையே

(1) 8, 5 (2) 10, 3 (3) 8, 3

36. சம அளவிலான ஆறு பக்கங்களைக் கொண்ட வடிவமொன்று மூன்று தடவைகள் மடிக்கப்பட்டு துளைகள் இடப்பட்ட வடிவம் முன்னே தரப்பட்டுள்ளது. அதனை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?




37. குற்றிகள் சில ஒன்றன் மீதொன்று அடுக்கப்பட்ட வடிவம் அருகே தரப்பட்டுள்ளது. இதனை முன்னாலிருந்து பார்க்கும் போது கண்ணுக்குப் புலப்படாத குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 குற்றிகள்

(2) 10 குற்றிகள்


(3) 12 குற்றிகள்

38. ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| **A** - பயன்படும் | **B** - பலவகையில் | **C** - மரங்களை | **D** - காப்பது |
| **E** - வளர்த்துக் | **F** - கடமையாகும் | **G** - நம் | **H** - எமக்குப் |

(1) H B A C G D F E (2) G C A B H E F D (3) H B A C E D G F

39. தாளில் இருந்து பென்சிலை எடுக்காமல் கீறக்கூடிய உரு எது?




40. தரப்பட்ட கூற்றுக்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடையை தெரிவு செய்க.

அ . தோமஸ் அல்வா எடிசன் 1847 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார்.

ஆ . என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சியில் பெற்றோர்கள் கடுமையாகப் பாடுபட்டனர்.

இ . அந்த ஆர்வத்தை வளர்க்கக் காரணமாக இருந்தவர் அவரது தந்தை தான்.

ஈ . அவரின் தந்தையார் சாதாரண வியாபாரி

உ . எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம்.

ஊ . எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும் போது அவருக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவாராம்.

(1) அ, உ, ஆ, ஈ, ஊ, இ

(2) அ, ஈ, ஆ, உ, இ, ஊ

(3) அ, ஈ, உ, ஆ, இ, ஊ

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 11 - 1943



மறைவு 03 - 11 - 2021

## திருமதி
## சண்முகநாதன் பாக்கியவதி

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் பாக்கியவதி கடந்த 03.11.2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து – பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் பாசமிகு மனைவியும், சந்திரலேகா (கனடா), சந்திரவதனி (கனடா), சந்திரகலா(பிரான்ஸ்), சர்வேஸ் வரன்(பிரான்ஸ்), சரவணபவன் (பிரான்ஸ்), சற்குணநாதன் (கனடா), காலஞ்சென்ற சபேசன், சந்திரமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்றவர்களான சிவபாதம், சகுந்தலாதேவி, சத்தியவதி மற்றும் சத்தியதேவி(கனடா), சோமசுந்தரம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

தர்மகுலசிங்கம், சிவராஜலிங்கம், சிவசுந்தரம், இராஜதேவி, சர்மிளா, மைதிலி ஆகியோரின் அன்பு மாமியாரும்,ரஜீவா – ரமேஸ், மிலானி – அனுராஜ், தனுசியா – கஜன், ரமிளா – முரளி, இலக்கியா – அஜந்தன், சுதன், வர்ஷினி, சுபங்கன் – பருந்தா, சங்கரன், ஷாருஜா, மதுஷா, நிரோஷா, விதுஷா, ஷரணியா, ஐஸ்வர்யா, கோகுலன், வருண், அருண், கவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,ஹரினி, லக்ஷா, அகிலாஷ், அக்ஷயா, அஷ்வின், அஷ்விதா, அனுஷ்கா, அக்ஷரா, அக்ஷரன், ஆதிதேவ், இஷான், ஷாசனா, நிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Sunday, 07 Nov 2021 1:30 PM - 4:30 PM,
Monday, 08 Nov 2021 3:00 PM - 3:30 PM,
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*கிரியை :*
Monday, 08 Nov 2021 3:30 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம் :*
Monday, 08 Nov 2021 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:

**கலா - மகள்**
**Mobile : +33626154312**

**சர்வேஸ் - மகன்**
**Mobile : +33767476100**

**பவன் - மகன்**
**Mobile : +33783718227**

**மோகன் - மகன்**
**Mobile : +33668478694**

**சற்குணநாதன் - மகன்**
**Mobile : +16474074983**

**சின்னக்கா - மகள்**
**Mobile : +14164122091**

**அனுராஜ் - பேரன்**
**Mobile : +16476227452**

**ரமேஸ் - பேரன்**
**Mobile : +14168394069**

# கடமைக்கு இடையூறு செய்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

## மன்னாரில் அமைச்சர் டக்ளஸ்



*மன்னார், நவ. 07*

வளமான எதிர்காலத்தினை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதே நோக்கமாக இருக்கின்ற போதிலும், சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கான விஜயத்தை நேற்று மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலாளர் சங்கப் பிரதிகள் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்டவிரோத தொழில் முறைகள் உட்பட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சட்டவிரோத தொழில் முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று வலியுறுத்தினார்.

மேலும், “நாடளாவிய ரீதியில் சுருக்கு வலை தடை செய்யப்பட்ட போதிலும், குறித்த தொழில் முறைகள் தொடர்பான புதிய ஒழுங்கு விதிகள் வெளியிடப்படும் வரையில் 3 இஞ்சிக்கும் குறையாத அளவு கண் வலைகளைப் பயன்படுத்தி 16 மைல்களுக்கு அப்பால் சுருக்கு வலை தொழிலை தற்காலிகமாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

அதேபோன்று கரைவலை தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் வின்ஞ் எனப்படும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதும் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு, தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்படை, பொலிஸார் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் எமது மக்களுக்கு தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக குறித்த வழிமுறையை தவிர்த்து வருகின்றேன்.

எனவே, கடற்றொழிலாளர்கள் தடை செய்யப்பட்ட தொழில்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

மேலும், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதில் எந்தவிதமான பாராபட்சங்களும் காட்டக்கூடாது என்று கடற்றொழில் திணைக்களப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடமை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுமானால் தனக்கு அறியத் தருமாறும் அவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்ததுடன், புனரமைக் கப்பட வேண்டிய கடற் றொழில் வீதிகள் தொடர்பான பட்டியலை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், முசலி போன்ற பிரதேசங்களில் ஏற்படுகின்ற கடலரிப்பினை தடுத்தல், கடலட்டை பண்ணை அமைக்க விரும்புகின்றவர்களுக்கு இடங்களை ஒதுக்குதல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மூளாய் சுகம் பேணும் நிலையத்தின் கிளை வைத்தியசாலை வட்டுக்கோட்டையில் திறப்பு





*யாழ்ப்பாணம், நவ. 07*

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ‘சுகம் பேணும் நிலையம்’ கிளை வைத்தியசாலையானது, வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில், நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் வட்டுக்கோட்டை சமூகம் ஆகியன இணைந்து இந்த வைத்தியசாலையை ஆரம்பித்து வைத்தனர்.

மூளாய் - கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் தலைவர் மா.ஞானேஸ்வரன் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக வைத்தியசாலையை திறந்துவைத்தார்.

இந்த திறப்பு விழா நிகழ்வில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் செயலாளர் க. செல்வராசா, மூ.கூ.வை. பொருளாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, வைத்திய அத்தியட்சகர், வைத்திய கலாநிதி கே.சுரேந்திரகுமாரன், வைத்தியர் பி.சிறீ கிருஷ்ணா, வைத்தியர் றஜனி, வைத்திய நிபுணர் வீரசுதன், வைத்தியர் பி.யசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த வைத்தியசாலையின் இலவச வைத்திய சேவைகளான நீரிழிவு பரிசோதனை, இரத்த பரிசோதனைகள் உள்ளிட்ட பல பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன.

தினமும் காலை 7 மணி தொடக்கம் காலை 10 மணி வரை மற்றும் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை, வைத்திய நிபுணர்கள் பலர் இணைந்து இலவசமாக மருத்துவ ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் சேவைகளில் வெளிநாடுகளில் வசிக்கும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த உதவ முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மனோ. ஹக்கீமை...

கண் நிகழ்ச்சியில், 13வது திருத்தச் சட்டம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், கூட்டத்திற்கு தலைமை தாங்கியமை தொடர்பில் எழுப் பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

தமிழ் பேசும் கட்சிகளிடையேயான இணைய வழிக் கூட்டங்கள் நடைபெறும் போது, ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு கட்சி தலைமை தாங்குவது என தீர்மானிக் கப்பட்டு இருந்தது. தமிழ் பேசும் கட்சி கள் ஒன்றுகூடிய கூட்டத்திற்கு முன்னேற் பாடாக, இறுதியாக இடம்பெற்ற இணைய வழிக் கூட்டத்தின்போது, யார் யாருடன் பேசுவது என தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்திற்கு தமிழரசுக் கட்சி வரவில்லை. ஆனால் தமிழ் அரசுக் கட்சியுட னும் பேசி முடிவெடுப்பது என தீர்மானிக் கப்பட்டிருந்தது. அதற்கு பிற்பாடு தமிழ் அரசுக் கட்சியுடன் பேசப்பட்டது. இரா. சம்பந்தனின் வீட்டிற்குச் சென்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக் கலநாதன் பேசியிருந்தார். மாவை சேனா திராசாவுடன் பேசியிருந்தார்.

முதலில் பங்குபற்றுவோம் என கூறி விட்டு, பின்னர் பங்குபற்றமாட்டோம் என கூறியிருந்தார்கள். ஏன் கூட்டத்தில் பங்குபற்றவில்லை என்பதற்கான கார ணத்தை தமிழ் அரசுக் கட்சி தரப்பு வெளிப் படுத்தவில்லை. தமிழ் அரசுக் கட்சி தங் களுக்குள் பேசி முடிவெடுப்பதற்கு போதிய கால அவகாசம் இருந்தது.

ஆரம்பத்தில் இணையவழிக் கூட்டங் களில் ஒரு முறை ஈ.பி.ஆர்.எல்.எவ் தலை மையேற்று நடாத்தினால், மறுதடவை இன்னோர் கட்சி பொறுப்பேற்று நடத் துவது என்ற பொறிமுறையை ஏற்படுத்தி யிருந்தோம். அதன் பிரகாரம் இந்தக் கூட்டத்தின் பொழுது முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹக்கீம் தலைமையேற்க வேண்டும் என கோரிக்கை முன்வைக் கப்பட்டது. அது உடனடியாக அனைவ ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தலைமை யேற்பு நடைபெற்றதே தவிர, வேறு பின்ன ணிக் காரணங்கள் எவையும் இருக்க வில்லை.

13வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசிய பரப்பில் உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அழைத் தமை மூலம் அரசாங்கத்திற்கு ஒரு காத்திர மான செய்தியை சொல்ல முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது என்று பதிலளித் திருந்தார்.

இதேவேளை தொகுப்பாளரால், வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் காங்கிரஸிடம் வினவி யதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு, நீண்ட காலத்தின் பின்னர் முஸ்லிம் தரப்பு தமிழ் தரப்புக்களோடு இணைந்து வரும் போது அதனை பேசவில்லை என பதில ளித்த சுரேஸ் பிரேமச்சந்திரன், நல்லாட்சி காலத்தில் புதிய அரசியலமைப்பு முயற்சி யின் போதும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பில் காத்திரமான வலியுறுத்தல் களை தவிர்த்திருந்தது என்றும் சுட்டிக் காட்டியிருந்தார்.

## தமிழ் கட்சி...

தெரிவித்துள்ளார்.

சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட் டணி தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக் கீம் ஆகியோருக்கு இடையே சந்திப்பு, கூட்டமைப்பு தலைவரின் கொழும்பு இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போது, கடந்த 2ம் திகதி யாழ்ப் பாணத்தில் நடந்த தமிழ், முஸ்லிம் கட்சி களின் உரையாடல் தொடர்பாக ஹக்கீ மும், மனோ கணேசனும் கூட்டமைப்பு தலைவருக்கு எடுத்து கூறினர்.

இதில் வடக்கு கிழக்கின் முன்னணி கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி யும், சிரேஷ்ட தலைவராக சம்பந்தனும் கலந்து கொள்வதை தாம் விரும்புவதாக மனோ, ஹக்கீம் இருவரும் வலியுறுத்தி கூறினர்.

இதற்கு பதிலளித்த கூட்டமைப்பு தலை வர் சம்பந்தன், “அரசியல் தீர்வை நோக் கிய பயணத்தில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மத்தி யில் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை முயற்சியை இலங்கை தமிழ் அரசு கட்சி ஒருபோதும் குழப்பாது. நாங்களும் கலந்து பேசத்தான் வேண்டும். கலந்து பங்களித்து ஒற்றுமையை மேலும் பலப் படுத்தத்தான் வேண்டும். தமிழ் கட்சி களுடனான பேச்சுவார்த்தை தளத்தில் தாம் எப்படி இணைந்து கொள்வது என் பது தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றம் கூடும்போது, நமது கட்சி எம்பிக்களுடன் கலந்து பேசி உங்களுக்கு அறிவிக்கிறேன்” என்று தெரிவித்தார்.

திருந்தார்.

## ரூ. 117 ஆல்...

ஆகும். இதற்கு முன்னர் ஒரு சீமெந்து பொதியின் விலை 1,098 ரூபாயாக காணப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் தொடக்கத்தில் சீமெந்து பொதியொன்றின் விலை 93 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 1,093 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (அ)

## நண்பர்களுடன்...

பிரபாகரன் ரஜீவன் (வயது 18) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த மாணவர் பாடசாலையில் சிரமதானம் செய்ய செல்வதாக வீட்டாரி டம் கூறிவிட்டு சென்றுள்ளார். பின்னர் திக்கரை பகுதியிலுள்ள வயல் கிணறு ஒன் றில் நண்பர்களுடன் சேர்ந்து நீச்சலடித் துள்ளார்.

அப்போது, திடீரென நீரில் மூழ்கி யுள்ளார். துரிதமாக செயல்பட்ட நண் பர்கள் அவரை மீட்டு மூளாய் மருத்துவ மனையில் உடனடியாக சேர்ப்பித்தனர்.

மூளாய் மருத்துவமனையிலிருந்து அவர் யாழ். போதனா மருத்துமனைக்கு மாற்றப்பட்டார். ஆனால், இடையி லேயே அவரின் உயிர் பிரிந்துவிட்டது.

அவரின் உடலம் யாழ். போதனா மருத்துவமனையில் பிரேத பரிசோதனை களுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## போரில்...

அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சி தானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

“உரோம கத்தோலிக்க கிரிகோரியன் நாட்காட்டிக்கமைய நினைவு கூர்க எனப் புதிய நாளை கத்தோலிக்க ஆயர் கூட்டம் சைவர்களை நோக்கிக் கூறுவதைக் கண் டிக்கிறேன்.

ஏற்கனவே வழமையில் இருந்த சந்தி ராயன நாட்காட்டியின் வளர்பிறை தேய் பிறை கணிப்பில் வானியல் அறிவின் துணை யுடன் சைவர்கள் இறந்தோரை நினைவு கூரும் வழக்கத்தை மாற்றக் கத்தோலிக்க ஆயர்கள் முயல்வதைக் கண்டிக்கிறேன்.

கிறிஸ்து பிறந்தநாளில் இருந்து வரு கின்ற நாட்காட்டியைக் கொண்டு சைவ ராகிய இறந்தோரை நினைவுகூரும் நாளை நிர்ணயிக்காதீர்.

சைவர்களைக் கிறிஸ்தவ மயமாக்கும் கடந்த 400 ஆண்டுகால முயற்சியின் தொடர்ச்சியாகவே ஆயர்கள் கூட்டம் நினைவு கூரும் நாளை அறிவித்துள்ள தைக் கண்டிக்கிறேன்.

சைவர்கள் வழமைபோல இறந்தோரை வழிபாட்டுடனும் உணர்வு மீறிக உறவு கள் நடுவணாக, நினைவுகூர்வர்.

கத்தோலிக்க ஆயரின் அடிமை மோகக் கோரிக்கைக்கு அமையச் சைவர்கள் தம் நினைவு கூர்தல் முறைமைகளை வழமை களை மாற்றமுடியாது.

கத்தோலிக்க ஆயர்களும் குருமாரும் கத்தோலிக்கத் தேவாலயங்களில் இறந்த கத்தோலிக்கர்களுக்குத் தாம் விரும்பிய நாளில் அல்லது நாள்களில் வழிபட்டு நினைவுகூர்தலையே சைவர்களாகிய நாங் கள் ஆதரிக்கிறோம்.

கத்தோலிக்க கிரிகோரியன் நாட்காட் டியை சைவர்கள் மீது திணித்துச் சைவ மரபுகளை உடைத்தெறிய முயலும் கத் தோலிக்க ஆயர் கூட்டத்தின் அறிவித் தலை எச்சரிப்புடன் கண்டிக்கிறேன்” என அவர் தெரிவித்துள்ளார்.

# சீனியின் விலை அதிகரிக்காது!

### ஜானக வக்கும்புர கூறுகிறார்



கொழும்பு, நவ. 07

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனியின் விலை எக்காரணத்தைக் கொண் டும் அதிகரிக்கப்பட மாட்டாது என கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம் பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சீனியின் நிர்ணய விலை நீக்கப்பட்ட போதிலும் லங்கா சதொச மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருகோணமலை-கோமரங்கடவல பிரதேசத்தில் மரமுந்திரிகை செய்கைக் காக 200 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச் செய்கை செய்வதற்கான ஆரம்பகட்ட நிகழ்வில் கலந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய இராஜாங்க அமைச்சர்-

மக்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளவேண்டும், விற்பனை செய்யப் படுவது என்பது வேறு அபிவிருத்தி செய்யப்படுவது என்பது வேறு எனவே நாட்டின் எந்த ஒரு தேசிய வளத்தினை யும் விற்பனை செய்யும் நோக்கம் எமது அரசாங்கத்துக்கு இல்லை.

லங்கா சதொச மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நாங்கள் ஒரு புரிந் துணர்வு ஒப்பந்தம் ஒன்றை நடைமுறைப் படுத்த உள்ளோம் அதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் லங்கா சதொச மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக குறைந்த விலைக்கு அதாவது ஒரு கிலோ கிராம் சீனி 125 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்பதை உறுதியாக தெரி வித்துக் கொள்கிறேன்.

இறக்குமதி சீனி விலை அதிகரிக்க ப் பட்டாலும் உள்நாட்டு சீனியின் விலை அதிகரிக்கப்படாது-என்றார்.

# 60 வயதுக்கு மேற்பட்ட எம்.பிக்களுக்கு 3ஆவது கொரோனா தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, நவ. 07

60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய் நிலைமைகளைக் கொண் டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, மூன்றாவது கொரோனா தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியைச் செலுத்த தீர் மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நாரஹேன்பிட்டியில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் தினமும் காலை 9.00 மணி முதல் பிற் பகல் 2.00 மணி வரை முன்னெடுக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புரட்சிகரமான...

புனரமைப்பு செய்யப்பட்ட 1,500 வீதி களை ஒரேநாளில் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று மண்டா டுவை பொது விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இதன்போது அவர் தெரிவித் தவை வருமாறு,

“புரட்சிகரமான மாற்றத்தை மக்கள் வேண்டி நின்றனர். அதனை செய்யும் போது ஏற்படும் தடங்கல்கள் மற்றும் தடைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். ஆனாலும், அந்த சவாலை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன்.

“உலகில் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையும் கோவிட் தொற்றுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. வீழ்ச்சிய டைந்திருந்த பொருளாதாரத்தின் முன்னே அடையாளம் காணமுடியாத தொற்று நோயுடன், பெரும் சவால்களுக்கு முகங் கொடுத்து மக்களின் வாழ்க்கையைப் பாது காப்பதற்காக பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதனால், அன்று வழங் கிய வாக்குறுதிகளை அவ்வாறே நிறை வேற்ற முடியவில்லை. ஆனாலும், மக் கள் என்மீது வைத்த நம்பிக்கையை பாது காக்கின்றனர்.

“சேதன விவசாயம் போன்று மீள்பிறப் பாக்கச் சக்திவலு உற்பத்திக்கான மாற் றத்தை ஏற்படுத்தவும் ஒருபோதும் பின் வாங்கப் போவதில்லை. பயறு, கௌபி, உளுந்து, மஞ்சள் உட்பட 16 வகையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய் வது முழுமையாக நிறுத்தப்பட்டது. இன்று அதன் பிரதிபலனை விவசாயிகள் அனுபவித்து வருகின்றனர். கறுவா, மிளகு, மஞ்சளுக்கான உயர் விலையை விவசாயி கள் பெற்றுக்கொள்கின்றனர். விவசாயி களின் கைகளுக்குக் கிடைக்கின்ற அந்த வருமானத்தைக் குறைக்காமல் இருப்பதற் கும் நுகர்வோரைப் பாதுகாக்கவும் நட வடிக்கை எடுக்கப்படும். இந்நிலைமை யைப் புரிந்துகொண்டு, பசுமை விவசாய சவாலை வெற்றிகொள்வதற்கு ஒன்றி ணைய வேண்டும்.

“நான் அதிகாரத்துக்கு வந்ததும் மதில் களில் சித்திரங்களை வரைந்த இளைஞர் கள் மாற்றத்தை ஆரம்பித்தனர். மேலும், பலர் கைவிடப்பட்டிருந்த வயல்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். அன்று வைத்த நம்பிக்கையுடன் புரட்சிகரமான மாற்றத்துக்காக அனைவரும் மீண்டும் முன்வர வேண்டும்.”, என்றார்.

## மேலும் 20...

அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள் ளான 20 பேர் நேற்று முன்தினம் மர ணித்துள்ளனர் என்று அந்த திணைக் களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணித்தவர்களில் 14 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். ஏனைய வர்கள் 30- 59 வயதுக்குட்பட்டவர்கள்.

ஈழநாடு
Eelanadu

# அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு தகுதி

அபுதாபி, நவ. 07

மேற்கிந்தியத் தீவுகள் அணியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி இருபது - 20 உலகக் கிண்ணத்தின் அரையிறுதிக்கு முன்னேறியது.

தொடக்க வீரரான டேவிட் வோர்ணர் 56 பந்துகளை சந்தித்து 89 ஓட்டங்களைக் குவிக்க, மிற்செல் மார்ஸ் 32 பந்துகளில் 53 ஓட்டங்களை சேர்த்து மேற்கிந்தியத் தீவுகளின் இலக்கை துரத்தியடித்தனர்.

இந்த வெற்றியின் மூலம் குழு 01இல் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது அவுஸ்திரேலிய அணி. இதன் மூலம் அந்தப் பிரிவில் இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

அபுதாபியில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 157 ஓட்டங்களைப் பெற்றது.



கிரன் பொலார்ட் 44 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றிருந்தார்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் ஹஷல்வூட் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

158 ஓட்டங்களை துரத்திய அவுஸ்திரேலியா 16.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

தொடக்க வீரரான டேவிட் வோர்ணர் ஆட்டமிழக்காமல் 4 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 89 ஓட்டங்களைக் குவித்தார். மிற்செல் மார்ஷ் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டியின் நாயகனாக டேவிட் வோர்ணர் தெரிவானார். (ஐ)



# இங்கிலாந்து அணியை வென்றும் தென்னாபிரிக்காவுக்கு ஏமாற்றம்!

சார்ஜா, நவ. 07

ரபாடாவின் ஹட்ரிக் விக்கெட் கைகொடுக்க இங்கிலாந்து அணியை 10 ஓட்டங்களால் வெற்றி கொண்ட போதிலும் தென்னாபிரிக்கா அணியால் அரையிறுதிக்கு முன்னேற முடியவில்லை.

இருபது - 20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் நேற்றிரவு இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதின. இங்கிலாந்து அணி குழு 01இல் முதலிடத்தைப் பிடித்து அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்திருந்தது.

இந்த நிலையில், அரையிறுதி வாய்ப்பை தமதாக்குவதில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. இந்த நிலையில், நேற்று அவுஸ்திரலியா மேற்கிந்தியத் தீவுகளை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டதன் மூலம் நிகர ஓட்ட விகிதத்தை அதிகரித்து குழு 01இல் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

இதனால், இரவு நடந்த போட்டியில் வலுவான இங்கிலாந்து அணியை எதிர்கொண்ட தென்னாபிரிக்க அணிக்கு மிகப்பெரும் வெற்றி தேவைப்பட்டது.

சார்ஜாவில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவின் வீரர்களில், வான் டெர் டுசென் 6 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 60 பந்துகளில் 94 ஓட்டங்களையும், அய்டன் மார்க்ரம் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர். குயின்ரன் டி கொக் 34 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 189 ஓட்டங்களை குவித்தது.

190 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து. தொடக்க வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய மொயின் அலி 37 ஓட்டங்களையும், 5ஆவது விக்கெட்டுக்காக இறங்கிய டேவிட் மலன் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

லிவிங்ஸ்ரன் அதிரடியாக 15ஆவது ஓவரில் தொடர்ச்சியாக இரு சிக்ஸர்கள் உட்பட 3 சிக்ஸர்களை விளாசி ஆட்டத்தை இங்கிலாந்தின் பக்கம் சாய்க்க முயன்றார். எனினும் அவரும் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதி ஓவரை வீசிய ரபாடா வோக்ஸ், இயன் மோர்கன், ஜோர்தன் ஆகியோரை தொடர்ச்சியாக ஆட்டமிழக்க செய்து ஹட்ரிக் விக்கெட்டை வீழ்த்தினார்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்த இங்கிலாந்து அணி 179 ஓட்டங்களைப் பெற்று, 10 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்களையும், சம்சி, பிரிட்டோரியஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக வான் டெர் டுசென் தெரிவானார்.












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-வின்னர்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்



இரவு
7.00 மணி : SPOTLIGHT - ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை-தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதகிருஸ்ணன்



**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவி (ஓம்)**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு